உ

கடவுள் துணை

திருக்குற்றாலக் குறவஞ்சி



இந்நூல் கிடைக்குமிடம்:—

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,

41, வெங்கடராமய்யர் தெரு,

ஜி. டி. சென்னை.

உ

கடவுள் துணை.

திருக்குற்றாலக் குறவஞ்சி



தென்காசி மண்டபம்-புக்ஷாப்
கா. நா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்
விருப்பத்தின்படி

சென்னை
B. இரத்தின நாயகர் ஸன்ஸ் அவர்களால்
திருமகள்விலாச அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] 1939. [அணா 4.

உ

சிவமயம்

திருக்குற்றாலக் குறவஞ்சி

விநாயகர் துதி

ஆசிரிய விருத்தம்.

பூமலி யிதழி மாலை புனைந்தகுற் றாலத் தீசர்
கோமலர்ப் பாதம் போற்றிக் குறவஞ்சித் தமிழைப் பாட
மாமதத் தருவி பாயு மலையென வளர்ந்த மேனி
காமலி தருப்போ லைந்து கைவலான் காவ லாமே.

சுப்பிரமணியக்கடவுள் துதி.

ஆசிரிய விருத்தம்.

பன்னிருகைவேல்வாங்கப்பதினொருவர்படைதாங்கப்பத்துதிக்கும்
நன்னலவீரரும்புகழமலைகளெட்டுங்கடலேழுநாடியாடப் [றாய்
பொன்னின்முடிபாரேந்தி யஞ்சுதலையெனக்கொழித்துப் புயநானமு
தன்னிருதாடருமொருவன்குற்றாலக்குறவஞ்சித்தமிழ்தந்தானே.

திரிகூடநாதர் துதி-ஆசிரிய விருத்தம்.

கிளைகளாய்க்கிளைத்தபலாக்கொம்பெலாஞ்சதுர்வேதக்கிளைகளீன்ற, களையெலாஞ்சிவலிங்கம்கனியெலாஞ்சிவலிங்கங்கனிகளீன்ற, களையெலாஞ்சிவலிங்கம்வித்தெலாஞ்சிவலிங்கச்சொரூபமாக, விளையுமொருகுறும்பலவின்முளைத்தெழுந்தசிவக்கொழுந்தைவேண்டுவோமே.

குழல்வாய்மொழியம்மை துதி-ஆசிரிய விருத்தம்.

தவளமதிதவழ்குடுமிப்பனிவரையின்முளைத்தெழுந்துகதைசேர்முக்க
பவளமலைதனிலாசைபடர்ந்தேறிக்கொழுந்துவிட்டுப்பருவமாகி
யவிழுநறைபூங்கடப்பந்தாமரையமீன்றொருகேட்டாம்பலீன்று [ம்.
குவலயம்பூத்தருள்கொடியைகோதைகுழலவர்மொழியைக்கூறுவோ

மூவர் துதி-ஆசிரிய விருத்தம்.

தலையிலேயாறிருக்கமாமிக்காகத் தாங்குகடலேழமைத்த திருக்குற்றாலா, சிலையிலேதடித்தடம்புயத்தைவாழ்த்திச் செழித்தகுறவஞ்சிநாடகத்தைப்பாட, வளையிலேமலைமிதக்க வேறினா மத்தியிலே பூவையந்நா ளழைப்பித்தானுங், கலையிலேகிடைத்தபொரு ளாற்றிற் போட்டுக் கனகுளத்திலெடுத்தானுங் காப்பதாமே.

அகத்தியர் வாதவூரர் துதி-ஆசிரிய விருத்தம்.

நித்தர்திரிகூடலிங்கர்குறவஞ்சிநாடகத்தைநிகழ்த்தவேண்டி
முத்தர்திருமேனியெல்லாமுருகவேள்தமிழுரைத்தமுனியைப்பாடி
இத்தரையிலாத்துமம்விட்டிறக்குநாட்சிலேட்டுமம்வந்தேறாவண்ணம்
பித்தனடிதுணைசேர்ந்தவாதவூரானடிகள்பேணுவோமே.

சரஸ்வதி துதி-ஆசிரிய விருத்தம்.

அடியிணைமலருஞ்செவ்வா யாம்பலுஞ்சிவப்பினாளை
நெடியபூங்குழலுமைக்க ணீலமுற்கறுப்பினாளைப்
படிவமும்புகழுஞ்செங்கைப் படிகம்போல்வெளுப்பினாளைக்
கொடிதனைத்திருக்குற்றாலக் குறவஞ்சிக்கியம்புவோமே.

நூற்பயன்-ஆசிரிய விருத்தம்.

சிலைபெரியவேடனுக்கு நரிக்கும்வேதச் செல்வருக்குந்தேவருக்
கிரங்கிமேனாட், கொலைகளவுகட்காமங் குருத்துரோகங் கொடியபஞ்
பாதகமுந் தீர்த்ததாலே, நிலவணிவார்குற்றாலநினைத்தபேர்க ணினைத்
வரம்பெறுவரது நினைக்கவேண்டிப், பலவளஞ்சேர்குறவஞ்சி நாடக
தைப் படிப்பவர்க்குங் கேட்பவர்க்கும் பலனுண்டாமே.

அவையடக்கம்-ஆசிரிய விருத்தம்.

தாரிணைவிருப்பமாகத் தலைதனில்முடிக்குந்தோறும்
நாரிணைப்பொல்லாதென்றே ஞாலத்தோர்தள்ளுவாரோ
சீரியதமிழ்மாலைக்குட் செல்வர்குற்றாலநாதர்
பேரினாலெனதுசொல்லைப் பெரியவர்தள்ளார்தாமே.

கட்டியக்காரன் வருகிற-விருத்தம்.

தேர்கொண்டவசந்தவீதிச் செல்வர்குற்றாலத்தீசர்
பார்கொண்டவிடையிலேறும் பவனியெச்சரிக்கைகூற
நேர்கொண்டபுரிநூன்மார்பு நெடியகைப்பிரம்புமாக
கார்கொண்டமுகிலேறென்னக் கட்டியக்காரன்வந்தான்.

இராகம்-தோடி, தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

பூமேவுமநுவேந்தர் முதலோரைப்
புரந்திடுஞ்செங்கோலான பிரம்புடையான்
மாமேருச்சிலையாளர் வாசர்குற்றாலநாதர்
வாசர்கட்டியக் காரன்வந்தனனே.

கட்டியக்காரன் சொல்லுகிற-விருத்தம்.

மூக்கெழுந்தமுத்துடையாரணிவருக்கை நன்னகரமூதூர்வீதி
வாக்கெழுந்தகுறுமுனிக்காய்மறியெழுந்த கரங்காட்டும்வள்ளலா
தேக்கெழுந்தமறைநான்கு சிலம்பெழுந்தபாதர்விடைச்சிலம்பிலே
மேக்கெழுந்தமதிசூடிக் கிழக்கெழுந்தஞாயிறுபோல்மேவினாரே.

திரிகூடநாதர் பவனி வருதல்.

தரு-இ-ம்-பந்துவராளி-தாளம்-சாப்பு.

பல்லவி.

பவனிவந்தனரே-மழவிடை-பவனிவந்தனரே

அநுபல்லவி.

அவனிபோற்றியகுறும்பலாவுறைமவுனநாயகரெவனநாயகர்
சிவனுமாயரியயனுமானவர்களால்விடையதனிலே பவ

சரணம்.

அண்டர்கூட்டமுமுனிவர்கூட்டமு மசுரர்கூட்டமு மனிதராகிய,
தொண்டர்கூட்டமு மிமையிலாரெனச் சூழ்ந்துதனித்தனி மயங்கவே
பண்டைநாரிவர்தேவரிவரெனபகுத்துநிறுவியவேளைதொறுந்தொறும்
மண்டலீகரைநந்திபிரம்படிமகுடகோடியிற்புடைக்கவே. பவ

தடுப்பதொருகரங் கொடுப்பதொருகரந் தரித்தசுடர்மழு விரித்த
தொருகரம், எடுத்தசிறுமறிபிடித்ததொருகரமிலங்கப் பணியணிது
லங்கவே,: அடுத்தவொருபுலிகொடுத்தசோமனு மானைகொடுத்தவிதா
னச்சேலையும், உடுத்ததிருமருங்கசையயமாலயன் றெடுத்தபரிகரி
யிசையவே. பவ

தொடருமொருபெருச்சாளியேறிய தோன்றல்செயப் படைத்
தாங்கவே, யடல்குலாவியதோகைவாகனத் தரசுவேல்வலம் வாங்க
கவே, படலமார்பினிற் கொன்றைமாலிகை பதக்கமணியொளி தேங்
கவே, யுடையநாயகன்வரவுகண்டுலகெலாந் தழைத்தோங்கவே. பவ

இடியின்முருக்கொடு படருமுகிலென யானைமேற்கெனபேரிமுழக்க
முந், துடியின்முழக்கமும்பரந்து திசைக்கரிதுதிக்கையாற் செவிபுதைக்
கவே, அடியர்முழக்கியதிருப்பல்லாண்டிசை யடைத்தசெவிகளுந்
திறக்கமூவர்கள், வடிசெய்தமிழ் திருமுறைகளொருபுற மறைக
ளொருபுறம்விளங்கவே. பவ

கனத்தரும்புரு கின்னரங்கழலாகவீணைமிழற்றவே
யானகாதிருமுத்தின்சிவிகைபொன்னுல்வட்டநிழற்றவே
வநிதைமார்பலகுஞ்சஞ்சாமரைவரிசைவிசிரிசுழற்றவே
தனதனிந்திரன்வருணன்முதலியசகலதேவரும் வழுத்தவே. பவ

சைவர்மேலிடச்சமணர்கீழிடச்சகலசமயமுமேற்கவே
கைவலாழியங்கருணைமாலொடுகமலத்தோன்புடைகாக்கவே
ஐவர்நாயகன்வந்தனன்பலவமரர்நாயகன்வந்தனன்
தெய்வநாயகவந்தனெனச்சின்னமெடுத்தெடுத்தார்க்கவே. பவ

சேனைப்பெருக்கமுந்தானைப்பெருக்கமுந் தேன்பெருக்கமுந் தாரின்
பெருக்கமும், ஆனைப்பெருக்கமுங்குதிரைப்பெருக்கமு மவனிமுழு
தினும்நெருங்கவே, மோனைக்கொடிகளின் காடுநெடுவெளிமூடியடங்க
லுமோடியிருண்டபி, னேனைச்சுடர்விரி யிடபகேதன மெழுந்துதிசை
திசைவிளங்கவே. பவ

கொங்குமலர்க்குழல்தெய்வமங்கையகுரவைபாவையைநெருக்கவே
யொத்ததிருச்செவியிருவர்பாடல்களுலகமேழையுமுருக்கவே

மத்தளம்புயல்போன்முழங்கிடமயிலனூர்நடம்பெருக்கவே
சத்திபயிரவிகௌரிகுழன்மொழித்தையலாளிடமிருக்கவே. பவ

பவனிகாணப்பெண்கள் வருகிற
விருத்தம்.

மாலேறும்விடையில்வருந்திரிகூடப்பெருமானூர்பவனிகாணக்
காலேறுங்காமனுக்கையேறும்படைப்பவுஞ்சாய்க்கன்னிமார்கள்
சேலேறுங்கலகவிழிக்கணைதீட்டிப்புருவநெடுஞ்சிலைகள்கோட்டி
மாலேறப்பொருதுமென்றுமணிச்சிலம்புமுரசறையவருகின்றூரே.

பெண்கள் சொல்லுகின்ற-கண்ணிகள்.
இ-ம்-புன்னுகவராளி-சாப்புதாளம்.

ஒருமானைப்பிடித்துவந்த பெருமானைத்தொடர்ந்துவரு
மொருகோடிமான்கள்போல வருகோடிமடைவார்
புரிநூலின்மார்பனிவ னயனென்பாரயனுகிப்
பொங்கரவமேதுதனிச் சங்கமேதென்பார்
விரிகருணைமாலென்பார் பாலாகில்விழியின்மேல்
விழியுண்டோமுடியின்மேல் முடியுண்டோவென்பார்
இருநாலுநான்முகனுந் திருமாலுமவருகையா
லீசனிவன்திரிகூட வாசனிவனென்பார்
ஒருகைவளைபூண்டபெண்கள் ஒருகைவளைபூணமறந்
தோடுவார்நகைப்பவரை நாடுவார்கமிழ்வார்
மெய்வளையுமறுவுடைய தெய்வநாயகன்முடித்த
வெண்மதியும்விளங்குதெங்கள் பெண்மதியோவென்பார்
இருகனத்துரவிக்கைதன்னை யரையிலுடைதொடுவார்
இந்தவுடைரவிக்கையெனச் சந்தமுலைக்கிடுவார்
கருதுமனம்புறம்போகக் கண்ணுக்குமையெடுத்த
கையமாயொருகண்ணிட்ட மையுமாய்வருவார்
திருபனிவன்னகரத் தெருவிலேநெடுநேரம்
நில்லானேஒருவசனஞ் சொல்லானேவென்பார்
கைவளைத்துக்கிடக்குமிவன் மெய்வளையும்பாம்புகட்குப்
பசியாதோதென்றலைத்தான் வென்பார்
இவ்வளைக்கைத்தோளழுந்த விவன்மார்பிலழுந்தாத
தென்னமுலைநமக்கெழுந்த வன்னமுலையென்பார்
மைவளையுங்குழல்சோரக் கைவளைகொண்டாளிதென்ன
மாயமோசடைதரித்த ஞாயமோவென்பார்.

வசந்தவல்லி வருகின்ற விருத்தம்.

நன்னகர்ப்பெருமான்போய் நாணமுங்கலையுந்தோற்ற
கன்னியற்கதப்போர்காட்டிக் காமவேள்கலக்கமூட்டிப்
பொன்னணிதிலதந்தீட்டிப் பூமலர்மாலைசூட்டி
வன்னமோகினியைக்காட்டி வசந்தமோகினிவந்தாளே.

இ-ம்-கல்யாணி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

வங்காரபூஷணமும்பூட்டித்-திலதந்தீட்டி
மாரனைக்கண்ணாலேமருட்டிச்
சிங்காரமோரன்பபெண்ணாள்வசந்தவல்லி
தெய்வரம்பைப்போலவேவந்தாள்
கண்ணுக்குக்கண்ணிணைசொல்லத்-திரிகூடற்
கண்ணுதலைப்பார்வையால்வெல்லப்
பெண்ணுக்குப்பெண்மயங்கவே-வசந்தவல்லி
பேடையன்னம்போலவே-வந்தாள்
கையாரசூடகமிட்டு மின்னாரைவெல்லக்
கண்ணிலொருநாடகமிட்டு
ஒய்யாரமாகநடந்து-வசந்தவல்லி
யோவியம்போலவேவந்தாள்
சல்லாபமாதுவீரர்-குற்ருலநாதர்
சங்கநெடும் வீதிதனிலே
உல்லாசமாதுரதிபோல-வசந்தவல்லி
யூர்வசியுநாணவேவந்தாள்.

இதுவுமது.

இ-ம்-பைரவி-அடதாளசாப்பு.

கண்ணிகள்.

இருண்டமேகஞ்சுற்றிச்சுருண்டுசுழி யெறியுங்கொண்டையாள்குழை
ஏறியாடிநங்கைச்சூறையாடும்விழிக்கொடையாள்
திருந்தபூமுருக்கினரும்புபோலிருக்குமிதழினாள் வரிச்
சிலையைப்போல்வளைந்து பிறையைப்போலிலங்குநுதலினாள்
அரம்பைதேசவில்லும்விரும்பியாசைசொல்லும்புருவத்தாள்பிறர்
அரிவைமயக்குமொருகருவமிருக்குமங்கைப்பருவத்தாள்
கரும்புபோலினித்துமருந்துபோல்வடித்தசொல்லினாள்-கடல்
கத்துந்திரைகொழித்தமுத்துநிரைபதித்தபல்லினாள்
பல்லினழகையெட்டிப்பார்க்குமூக்கிலொருமுத்தினாள்-மதி
படரும்வடிவுதங்கியழகுகுடிகொளுமுகத்தினாள்
வில்லுப்பணியுனைந்துவல்லிக்கமுகைவென்றகழுத்தினாள்-ஜகம்
விலையிட்டெழுதியின்பநிலையிட்டெழுதுந்தொய்யிலெழுத்தினாள்
கல்லுப்பதித்ததங்கச்செல்லக்கடகமிட்டசெங்கையாள்-எங்குங்
கச்சுக்கிடக்கினுந்தித்திச்சுக்கிடக்குமிருகொங்கையாள்
ஒல்லுங்கருத்தர்மனக்கல்லுஞ்சுழிக்குமெழி லுந்தியாள்-மிது
ஒழுங்குகொண்டுள்ளத்தைவிழுங்குஞ்சிறுரோமபந்தியாள்
துடியுள்ளடங்கியொருபிடியுள்ளடங்குஞ் சிறுரோமபந்தியாள்-காமத்
துட்டனரண்மனைக்குக்கட்டுங்கதலிவாழைத்துடையினாள்

அடுக்குவர்னச்சேலையெடுத்து நெறிபிடிக்கவுடையினள்-மட
வன்னநடையிலொருசின்னநடையினள்
வெடித்தகடலமுதையெடுத்து வடிவுசெய்தமேனியாள்-எரு
வீமப்பாகம்பெற்றகாமப்பாலுக்கொத்தசீனியாள்
பிடித்தசுகந்தவல்லிக்கொடிபோல வசந்தவல்லிசெருக்கமே-சத்தி
பீடவாசர்திரிகூடநாதர்சித்தமுருக்குமே.

வசந்தவல்லி பந்தடிக்கின்ற

விருத்தம்.

வித்தகர்திரிகூடத்தில் வெளிவந்தவசந்தவல்லி
தத்துறுவிளையாட்டாலோ தடமுலைபளைப்பிலோ
நத்தணிகரங்கள்சேர்ப்ப நாலடிமுன்னேயோங்கிப்
பத்தடிபின்னேவாங்கிப் பந்தடிபயில்கின்றாளே.

இ-ம்-பைரவி-சாப்புதாளம்.

கண்ணிகள்.

செங்கைவண்டுகலீர்கலீரென்று செயஞ்செயமென்றாட-இடைமலர்ப்
சங்கதமென்றுசிலம்பொடுதண்டைகலந்தாட-இரு
பொங்கொடும்பகைவென்றனமென்றுகுழைந்துகுழைந்தாட
பைங்கொடிநங்கைவசந்தசௌந்தரிபந்துபயின்றனளே

பொங்குகனங்குழைமணங்கியசெண்டைபுரண்டுபுரண்டாடகுழன்
குயில்வண்டுத்தலைந்ததுகண்டுமதன்சிலைவண்டோட-இனி
இங்கிதுகண்டுலகென்படுமென்றுமென்றிடைதிண்டாட-மலர்ப்
பங்கயமங்கைவசந்தசௌந்தரிபந்துபயின்றனளே

சூடகமுன்கையில்வாள்வளைகண்டிருதோள்வளைநின்றாட-புனை
பாடகமுஞ்சிறுபாதமுமங்கொருபானைகொண்டாட-நய
நாடகமாடியகோதைமயிலெனநன்னகர்வீதியிலே-அணி
பாடகவல்லிவசந்தவொய்யாரியடர்ந்துபந்தாடினளே

இந்திரையோவிவள்சுந்தரியோதேவரம்பையோமோகினியோ-மன
முந்தியதோவிழிமுந்தியதோகரமுந்தியதோவெனவே-உயர்
சந்திரசூடர்குறும்பலவீசுரர்சங்கணிவீதியிலே-மணிப்
பைந்தொடிகாரிவசந்தவொய்யாரிபொற்பந்துகொண்டாடினளே

இதுவும் வசந்தவல்லி பந்தாடுகின்ற

விருத்தம்.

கொந்தொடிப்பூங்குழல்சரியநன்னகரில் வசந்தவல்லிகொடியமகன்
முந்தடிபிந்நடியிடைபோய்முகறநாலடிநடந்துமுடிகிமாதா
சந்தடியிற்றிருகியிடசாரிவலசாரிகற்றிச்சகிமார்சூழப்
பந்தடிக்கும்பாவனையைப்பார்க்கவயனுயிரங்கண்படைத்திலானே.

தரு-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

பந்தடித்தனள் வசந்தசுந்தரி-விந்தையாகவே

அநுபல்லவி.

மந்தரமுலையேசலாடமகரக்குழைகளூசலாடச் சுந்தரவிழி பூசலாடத்
தொங்கத்தொங்கத்தொங்கத்தொம்மெனப் பந்த

சரணங்கள்.

பொன்னிறொளிவில்வந்துகாவியமின்னிறொளிவுபோலவே
சொன்னயத்தனைநாடிநாடித்தோழியருடன்கூடிக்கூடி
நன்னகர்த்திரிகூடம்பாடிநகுர்தத்திகுதிகுர்த்தோமெனப் பந்த

வசந்தவல்லி-சுவாமிகளைக்காண்கின்ற

விருத்தம்.

வருரங்குவீதிதன்னில் வசந்தபூங்கோதைகாலி
லிருபந்துகுதிகொண்டாட விருந்துமுலைகொண்டாட
வொருபந்துகைகொண்டாட வொருசெப்பிலஞ்சிபந்துந்
தெருவந்துவித்தையாடுஞ் சித்தரையெதிர்கண்டாளே.

தரு-இ-ம்-அடாணு-ரூபகதாளம்.

பல்லவி.

இந்தச்சித்தராரோ-வெகு

அநுபல்லவி.

விந்தைக்காரராகவிடையில்வந்தாரே

சரணங்கள்.

நாகம்புயத்திற்கட்டிநஞ்சுகழுத்திற்கட்டி
நாகமணுகாமலெங்குங்காடுகட்டி
பாகந்தனிலொருபெண்பச்சைக்கிளிபோல்வைத்து
மோகமாயொருபெண்ணைமுடியில்வைத்தார் இந்தச்

மெய்யிற்சிலம்பழகுங்கையின்மழுவழகும்
மையார்விழியார்கண்டால்மயங்காரோ
செய்யசடையின்மேலேதிங்கட்கொழுந்திருக்கப்
பையவிரிக்குதம்மாபாம்புசும்மா இந்தச்

அரைக்கண்பார்வையாலேயனங்கன்றங்கமாக
உருக்கிப்போட்டார்கண்டவுடனே தான்

பெருக்கம்பார்க்கிலெங்கள்திருக்குற்றாலர்போல
விருக்குமிவர்செய்மாயமொருக்காலே இந்தச்

தோழிமார் சொல்லக்கேட்டு
வசந்தவல்லி மோகங்கொள்ளுதல்.

விருத்தம்.

திங்களைமுடித்தார்கண்டாய் திரிகூடச்செல்வர்கண்டா
யெங்குளசித்துக்கெல்லா மிறையவரிவரேயென்று
நங்கைமார்பலருங்கூற நன்மொழித்தெறன்மார்த்தி
மங்கையர்வசந்தவல்லி மனங்கொண்டாள்மயல்கொண்டாளே.

இ-ம்-புன்னாகவராளி-ரூபகதாளம்.

கண்ணிகள்.

முனிபரவுமினியானோமுழுப்பலவின்கனிதானோ
கனியில்வைத்தசெந்தேனோகருத்துருக்கவந்தானோ
தினகரன்போற்சிவப்பழகுந்திருமிடற்றிற்கருப்பழகும்
பனகவணிக்காதுங்கண்டாற்பாவையுந்தானுருகாதோ
வாகனைக்கண்டுருகுதையோமயக்கமாய்வருகுதையோ
மோகமென்பதிதுதானோமுன்னமேநானறிவேனோ
ஆகமெல்லாம்பசுந்தேனேயன்னைசொல்லுங்கசந்தேனே
தாகமன்றிப்பூணேனேசரிவளையுங்காணேனே.

பாங்கிகள்-புலம்பல்.

விருத்தம்.

நடைகண்டாலன்னந்தோற்கு நன்னகர்வசந்தவல்லி
விடைகொண்டானெதிர்ச்சங்க வீதியிற்சங்கந்தோற்று
சடைகொண்டானுடைதான்கொண்டு தன்னுடைகொடுத்தானைய
னுடைகொண்டவழக்குத்தானோ வூர்கண்டதேர்கண்டானே.

இ-ம்-தோடி-சாப்புதாளம்.

கண்ணிகள்.

ஆசைகொண்டுபாரில்வீழ்ந்தாள்நேசமானென்பார்-விளை
யாடாள்பாடாள்வாடாமாலைசூடாள்காணென்பார்
பேசொணாதோமோசமென்னமோசமோவென்பார்
பேயோவென்பார்பிச்சோவென்பார்மாயமோவென்பார்
ஐயோவென்னசெய்வோமென்பார்தெய்வமேயென்பார்-கனைப்
பாச்சோவென்பார்மூச்சேதென்பார்பேச்சேதோவென்பார்
கையிற்றிருநீறெடுப்பார்தையலாரெல்லாம்-சூலக்
கையாதிரிகூடநாதாகண்பாரென்பார்

வசந்தவல்லியைப்-பாங்கிகளுபசரித்தல்.

விருத்தம்.

வானவர்திருக்குற்றாலர் மையலால்வசந்தவல்லி
தானுடல்சோர்ந்தாளென்று தமனியமாடஞ்சேர்ந்து
மேனையாரழகுதோற்ற மின்னனார்விழிந்தபேரைக்
கூனைகொண்டமிழ்த்துவார்போற் குளிர்ச்சியாய்செப்புவாரே.

இ-ம்-கல்யாணி-சாப்புதாளம்.

கண்ணிகள்.

முருகுசந்தனக் குழம்புபூசுவார்-விரகத்தீயை
மூட்டிமூட்டி விசிறிவீசுவார்
கருகுதேயுட லுருகுதேயென்பார்-விரிதற்பூவுங்
கரியுதேமூத்தம் பொரியுதேயென்பார்
அருகிலிருந்துகதை கண்டத்துவார்-எடுத்துமாதர்
அணைத்துவாழைக் குறித்திற்கிடத்துவார்
பெருகுநன்னகர்க் குறும்பலாவினர்-வசந்தமோகினி
பெருநிலாவினொடு குலாவினுள்.

வசந்தவல்லி-சந்திரதூஷணஞ்செய்தல்.

விருத்தம்.

பெண்ணிலோர் குழன்மொழிக்கோர்
பங்குகொடுத்தவர் கொடுத்தபிரமையாலே
மண்ணிலேமதிமயங்கிக் கிடக்கின்றே
னுனக்குமதி மயக்கந்தானோ
கண்ணிலே நெருப்பைவைத்துக்
காந்துவாருடன்கூடிக் காந்திகாந்தி
விண்ணிலே நெருப்பைவைத்தாய்
தண்ணிலாக்கொடும்பாவி வெண்ணிலாவே.

இ-ம்-வராளி-ஆதிதாளம்.

தண்ணமுதுடன்பிறந்தாய் வெண்ணிலாவே-அந்தத்
தண்ணளியையேன்மறந்தாய் வெண்ணிலாவே

பெண்ணுடன்பிறந்ததுண்டோ வெண்ணிலாவே-என்றன்
பெண்மைகண்டுங்காயலாமோ வெண்ணிலாவே

விண்ணிலேபிறந்தவர்க்கோ வெண்ணிலாவே-எரு
விட்டுநானெறிந்ததற்கோ வெண்ணிலாவே

கண்ணில்விழியாதவர்போல் வெண்ணிலாவே-மெத்த
காந்தியாட்டமாடுகிருய் வெண்ணிலாவே
ஆகடியம்செய்தல்லவோ வெண்ணிலாவே-நீதா
னுட்படியம்போற்குறைந்தாய் வெண்ணிலாவே
மோகம்வரக்காணேனென்ருல் வெண்ணிலாவே-அந்த
வேகமுனக்கானதென்ன வெண்ணிலாவே
நாகமென்றேயெண்ணவேண்டாம் வெண்ணிலாவே-இது
வாகுகுழல்பின்னல்கண்டாய் வெண்ணிலாவே
கோகனகவீறழித்தாய் வெண்ணிலாவே-திரி
கூடலிங்கர்முன்போய்க்காய்வாய் வெண்ணிலாவே

வசந்தவல்லி மன்மததூஷணஞ்செய்தல்.

விருத்தம்.

தண்ணிலாமெளிதந்தமையலானதையறிந்துதையலர்கள்
எண்ணிலாப்பகையெடுத்தாரின்னகரைகன்னகரென்றெவர்சொன்னு
ரண்ணலார்திரிகூடநாதரென்பாரென்னளவுமறைந்திட்டாரோ
வெண்ணிலாக்குடைபிடித்துமீனகேதனம்பிடித்தவேனிலானே.

இ-ம்-எதுகுலகாம்போதி-சாப்புதாளம்.

கண்ணிகள்.

கைக்கரும்பென்னகணேயென்னநீயென்ன மன்மதா-இந்தச்
செக்கரும்பாவிநிலாவுமேபோதாதோ மன்மதா
மைக்கருங்கண்ணுளிரதிக்குமால்கொண்ட மன்மதா-விடை
வல்லார்க்குமால்கொண்டபொல்லாப்பென்மேலுண்டோமன்மதா
திக்கெல்லாந்தென்றற்புலிவந்துபாயுதே மன்மதா-குயிற்
சின்னம்பிடித்தபின்னம்பிடியாதே மன்மதா
அக்காளைஞ்சகிவெட்காமலேசுவாள் மன்மதா-அவ
ளல்லாமற்ருயொருபொல்லாதநீலிகாண் மன்மதா
நேரிழையாரையுமூவரையும்பாரடா மன்மதா-கண்ணில்
நித்திரைதாஞெருசத்துருவாச்சுவே மன்மதா
பேரிகையேனன்றிபூரிகையேன்பிள்ளாய் மன்மதா
பெண்பிள்ளைமேற்பொருதாண்பிள்ளையாவையோ-மன்மதா
வார்சடையீதல்லதார்குழற்பின்னல்காண் மன்மதா-நெற்றி
வந்ததுகண்ணல்லசிந்தூரரேகைபார் மன்மதா

காரிபங்காளர்தென்னாரியநாட்டினார் மன்மதா-உங்கள்
நன்னகர்குற்றாலர் முன்னமேசொல்லுவாய் மன்மதா

பாங்கி வினவுதல்-விருத்தம்.

படியேழுடையார்திரிகூடப் படைமாமதனைப்பயிற்றியசொல்
அடியேசகியாதிருக்கையிலே யதுநான்பயின்றாலாகாதோ
கொடியேமதுரம்பழுத்தொழுகுங்கொம்பேவம்புபொருதமுலைப்
பிடியேயெமதுகுடிக்கொருபெண் பிள்ளாய்கருத்துவிள்ளாயே.

வசந்தவல்லி-பாங்கிக்குரைத்தல்.

இ-ம்-கல்யாணி-சாப்புதாளம்.

கண்ணிகள்.

மெய்யர்க்குமெய்யாதிரிகூடநாயகர்மீதில்-மெத்த
மையல்கொண்டேனந்தச்செய்தியைக்கேளாய்நீசகியே
செய்யச்சடையுந்திருக்கொன்றைமாலையழகு-மவர்
கையின்மழுவுமென்கண்ணைவிட்டேயகலாதே
கங்கைக்கொழுந்தணிதெய்வக்கொழுந்தைநான்கண்டு-குளிர்
திங்கட்கொழுந்தையுந் தீக்கொழுந்தாக்கிக்கொண்டேனே
சங்கக்குழையாரைச்சங்கமறுகினிற்கண்டு-இரு
செங்கைக்குட்சங்குமுஞ்சேர்ந்துமருவிட்டேனே
மன்றற்குளவிதினங்கொட்டக்கொட்டநொந்தேனே
தென்றற்குளவிதினங்கொட்டக்கொட்டநொந்தேனே
குன்றச்சிலையாளர்குற்றாலநாதர்முன்போனேன்-மதன்
வென்றிச்சிலைகொண்டுமெல்லவெல்லப்பொருதானே
பெம்மானைநன்னகர்ப்போய்ராஜவீதியிற்கண்டு
மைந்தனைக்கண்டுதலையைநெகிழவிட்டேனே
செம்மேனிதன்னிற்சிறகறுப்பாரைநான்கண்டு-இப்போ
அம்மாவென்மேனியடங்கலுமேகறுத்தேனே
வெள்ளிவிடையில்வியாழம்புனைந்தாரைக்கண்டு-இந்த
நள்ளியதிங்களைஞாயிறுபோலக்கண்டேனே
எள்ளளவூணுமுறக்கமுமில்லாரைக்கண்டு-நானும்
ஒள்ளியவூணுமுறக்கமுமற்றுவிட்டேனே

பாங்கி பழித்தல்-விருத்தம்.

தரைப்பெண்ணுக்கணுபோல்வந்த தமனியக்கொடியேமாதர்
துரைப்பெண்ணேவசந்தவல்லிசொன்னபேதமைக்கென்சொல்வேன்
வரைப்பெண்ணுக்காசைபூண்டு வளர்சங்கமறுகினூடே
நரைத்தமாடேறுவார்க்கோ நங்கைநீமயல்கொண்டாயே.

வசந்தவல்லி சுவாமிகளைப் புகழ்ந்து கூறல்.

இ-ம்-சௌராஷ்டிரம்-ரூபகதாளம்.

கண்ணிகள்.

மன்னவர்குற்றாலர்செய்தியின்னமின்னங்கேளாயோமானே-அவர்
வாகனத்தின்மால்விடைக்குலோகமெல்லாமோரடிகண்மானே
சன்னிதியின்பேறல்லவோபொன்னுலகிற்றேவர்செல்வமானே-தின
சந்திரரும்சூரியரும்வந்திறங்கும்வாசல்கண்டாய்மானே [ஞ்
நன்னகரிலிருக்குநாதனொருத்திதானோவாசைகொண்டேன்மானே
கன்னியருமாசைகொண்டார்பன்னியருமாசைகொண்டமானே
தென்னிலங்கைவாழுமொருகன்னிகைமண்டோதரியாள்மானே-அவ
பொன்னடியிற்சேர்ந்தணையஎன்னதவஞ்செய்தாள்மானே. [ர்

இதுவும் வசந்தவல்லி பாங்கிகளுக்குச் சொல்லுகிற

விருத்தம்.

வேரிலேபழம்பழுத்தூரிலேசுளைவெடித்துவெடித்ததீந்தேன்
பாரிலேபாதாளகங்கைவந்ததெனக்குதித்தபதித்தேன்கங்கை
நீரிலேசுளைபெருகுங்குறும்பெலாங்கொலுவிருக்குமிமலமூர்த்தி
பேரிலேபிரமைகொண்டபெண்களிலேநானுமொருபெண்கடாமே.

பாங்கி சொல்-விருத்தம்.

வசந்தவுல்லாசவல்லி வல்லிக்குமெல்லிபேசி
பசந்ததோர்பசப்புங்கண்டாய் பரமன்மேலாசைகொண்டாய்
நிசந்தருந்திருக்குற்றால நிரந்தரமூர்த்தியுன்பா
லிசைந்திடக்கருமமேதோ விசையநீயிசைத்திட்டாயே.

வசந்தவல்லி வருந்துதல்.

இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

புரத்துநெருப்பைமூவர்க்கவித்தவர்மையல்கொண்ட வென்
னொருத்திகாமநெருப்பையவிக்கலார்
பருத்தமலையைக்கையிலிணக்கினர் கொங்கையான்
பருவமலையைக்கையிலிணக்கிலார்
அஞ்சுதலைக்குளாறுதலைவைத்தோர் எனதுமனதினில்
அஞ்சுதலைக்கோராறுதலைவையார்
நஞ்சுபருக்கியமுதங்கொடுத்தவர் எனதுவாள்விழி
நஞ்சுபருக்கியமுதங்கொடுக்கிலார்
தேவர்துரைதன்சாபந்தீர்த்தவர் வன்னமாங்குயிற்
சின்னத்துரைதன்சாபந்தீர்ந்திலார்
யாவரும்புகழ்திருக்குற்றாலர்தாம் சகலபேர்க்கு
மிரங்குவாரெனக்கிரங்கிலார்பெண்ணே.

பாங்கி சொல்லுகிற-விருத்தம்.

நன்னகர்குற்றாலநாதர்மேலாசைபூண்டு
சொன்னவர்க்கிணங்கவார்த்தைசொல்லவும்படித்துக்கொண்டாய்
சன்னிதிவிசேஷஞ்சொல்லத்தக்கதோமிக்கதோதான்
என்னிலானதுநான்சொன்னேனினியுனதிச்சைதானே.

வசந்தவல்லி பாங்கியைத் தூதனுப்புதல்.

தரு-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

தூதுநீசொல்லிவாராய்பெண்ணே-குற்றாலர்முன்போய்த்
தூதுநீசொல்லிவாராய்பெண்ணே.

அநுபல்லவி.

ஆதிநாட்சுந்தரர்க்காய்தூதுபோனவர்போலே தூதுநீ

சரணங்கள்.

உறங்கஉறக்கமும் வாராதுமாயஞ்செய்தாரைமறந்தால் மறக்கவுங்கூடாது - பெண்ஜெனன மென்றுபிறந்தாலும் பேராசையாகாது ஆகாதென்றுநான் அறிந்துஞ்சலுக்கைக்காரர்க் காசையானேனிப்போது தூது

நேற்றைக்கெல்லாங் குளிர்ந்துகாட்டி-இன்றுகொதிக்கும் நித்திலாப்பாவிக் கென்னபோட்டி - நடுவேயிந்தக் - காற்றுக்குவந்ததொருகோட்டி விரகநோய்க்கு-மாற்றுவருந்து முக்கண்மருந்தென்று பாஞ்சாட்டி (தூது) வந்தாலிங்நேரம் வரச்சொல்லு-வராதிருந்தால் மாலையாகிலுந் தரச்சொல்லு-குற்றாலநாதர் தந்தாலென்னெஞ்சைத் தரச்சொல்லு தராதிருந்தால் - தாம்பெண்ணாகிய பெண்ணை நானவிடேனென்றுசொல்லு தூது

வசந்தவல்லி-பாங்கிக்குச் சந்திசமயஞ் சொல்லுதல்.

விருத்தம்.

செவ்வேளையின்றருள்வார்சிலவேளையென்றருள்வார்திரும்பத்தாமே
யவ்வேளையழைத்தருள்வாரார்வேளையொருவருக்குமறியொண்ணாதா
கைவேழமுரித்தவர்குற்றாலர்கொலுமவருக்குங்காணொணாதால்
எவ்வேளைபலவுமுண்டுவியல்வேளையான்சொலக்கேண்மின்னனாளே.

தரு-இ-ம்-பியாகடை-ஆதிதாளம்.

திரிகூடராஜருக்குத்திருவனந்தல்முதலாகத்
தினமுமொன்பதுதரங் கொலுவிற்சகியே
பெரிதானவபிஷேகமெழுகாலமுமொருவர்
பேசுதற்குச்சமயமல்ல கண்டாய்சகியே

வருநாளிலொருமூன் றுதிருநாளும்வசந்தனு
மாதவழிவருஷவழி சிறப்புஞ்சகியே
ஒருநாளுக்கொருநாளில்வியனுசுக்குழன்மொழிப்பெண்
ணுகந்திருக்குங்கொலுவேளை கண்டாய்சகியே
பெத்தரிக்கமிகுந்திருக்குங்குற்றாலநாதலிங்கர்
பெருங்கொலுவிற்சமய மறியாமற்சகியே
சித்தரோடுதெவர்கணஞ்சிவகணங்கள்தடைசெய்த
திருவாசற்கடைநிற்பார் சிலபேர்சகியே
அத்தலையிற்கடந்தவர்கள்நந்திபிரம்படிக்கொதுங்கி
ஆட்கொண்டார்குறட்டில்நிற்பார் சிலபேர்சகியே
மைந்தருங்கணமாதர்விட்டவண்டுகளும்கிள்ளைகளும்
வாசல்தொறுங்காத்திருக்கும் கண்டாய்சகியே
கோலமறையோதியசங்கரவிசுவநாதனருள்
குற்றாலச்சிவராமகம் செய்யுஞ்சகியே
பாலாறுநெய்யாறுயபிஷேகநைவேத்தியமும்
பணியாறுகாலமுங் கொண்டருளிச்சகியே
நாலுமறைப்பழம்பாட்டுமூவர்சொன்னதிருப்பாட்டு
நாலுகவிப்புலவர்புதுப் பாட்டுஞ்சகியே
நீலகண்டர்குற்றாலர்தேவியுடன்கொலுவிருப்பார்
ஆசைசொல்லக்கூடாது கண்டாய்சகியே
முப்பொழுதுந்திருமேனிதீண்டுவார்வந்துநின்று
முயற்சிசெய்யுந்திருவநந்தற் கூடிச்சகியே
கொப்பழகுகுழன்மடந்தைபள்ளியறையிருந்து
கோயில்புகுமேகாந்தச் சமயஞ்சகியே
மைப்பழகுவிழியாயென்பெருநாளைநீசொல்லி
மறுமாலைவாங்கிநீ வாராய்சகியே.

கொச்சகம்.

தெண்ணீர்வடவருவிற் தீர்த்தத்தாற்செஞ்சடைமேல்
விண்ணீர்புனைந்தார் விரகவெம்மைக்காற்றுமல்
கண்ணீர்நறும்புனலாய்க் கைவளையேசெய்தரையாய்
உண்ணீரிற்கூட லுரைகிணறுசெய்வாளே.

கூடல்சிந்து.

இ-ம்-பந்துவராளி-தாளம்-திரிபுடை.

பாடியமறைதேடியநாயகர்பன்னகர்பணிநன்னகர்நாயகர்
பாவலர்மனுக்காவலர்நாயகர்பதஞ்சலிபணியாளர்
கோடியமதிசூடியநாயகர்குழன்மொழிபுனலாகியநாயகர்
குறும்பலாவினிற்கூடுவார்மேனிற்கூடவேநீகண்டாய்

விருத்தம்.

ஆடல்களைவீதியிலேயங்கணர்முன் போட்டசங்கமாங்குவீட்டில்
தேடல்வளைக்குறிபோலக்குடல் வளைந்திருந்துவல்லிதியங்கும்போதில்
கூடல்வனைக்கரமசையமாத்திரைக் கோலேந்திபணிக்கூடைதாங்கி
மாடமருகூடதிரிகூடமலைக் குறவஞ்சிவருகின்றாளே.

குறத்தி வருதல்-ஆசிரியப்பா.

சைவமுத்திரைபைவானின்மேற்றருக்குந்
தெய்வமுத்தலைசேர்திரிகூடமலையான்
வான்புனல்குவட்டுமடைக்குருசினுக்குத்
தேன்புரையேறுபூஞ்சித்திரநதியான்
ஏரிநீர்செழிக்கவாரிநீர்கொழிக்கு
மாரிநீர்வளர்தென்னாரியநாட்டான்
கன்னிமாப்பழுத்துக்கதலிதேன்கொழித்துச்
செந்நெல்கரத்தளிக்குநன்னகர்பதியான்
ஓராமறையோங்கியபரியான்
ஈராயிரமருப்பேந்தியயானையான்
சேவகவிருதுஜெயவிடைக்கொடியான்
மூவகைமுரசுமுழங்குமண்டபத்தான்
அண்டகோடிகளையாணையாலடக்கிக்
கொண்டல்போற்கருக்குங்கொற்றவெண்குடையான்
வாலசுந்தரிகுழல்வாய்மொழியருட்கண்
கோலவண்டிணங்குங்கொன்றைமாலிகையான்
பூவளர்செண்பகக்காவளர்தம்பிரான்
தேவர்கள்தம்பிரான் திருவருள்பாடி
இறகுநீறணிந்துதிலகமுழுகிக்
குலமணிப்பாசியுங்குன்றியும்புனைந்து
சலவைசேர்மருங்கினிற்சாயத்தியகூடையும்
வலதுகைப்பிடித்தமாத்திரைக்கோலும்
மொழிக்கொருசப்பும்முலைக்கொருகுலுக்கும்
விழிக்கொருசிமிட்டுவெளிக்கொருபகட்டுமாய்
உருவசியரம்பைகருவமுமடங்க
முறுவலின்குறும்பால்முனிக்குறும்படங்க
சமனிக்குமுறையால்சபையெலாமடங்கக்
கமனிக்குமவனுங்கடைக்கண்ணாலடங்கக்
கொட்டியவுடுக்குங்கோடாங்கிக்குறிமுதல்
பட்டிலாக்குறிகளுங்கட்டினாலடக்குக்
கொங்கணமாரியங்குச்சிலாதேசமும்
கொங்கைமாத்திரைக்கோல்செங்கோல்நடாத்தி
கன்னடந்தெலுங்குகலிங்கராச்சியமுந்

தென்னவர்தமிழால்செய்ததம்பநாட்டி
மன்னவர்தமக்குவலதுகைநோக்கி
காலமுன்போங்குறிகைப்பலங்குறி
மேலினிவருங்குறிவேண்டுவார்மனக்குறி
மெய்க்குறிகைக்குறிவிழிக்குறிமொழிக்குறி
எக்குறியாயினுமிமைப்பினிலுரைக்கு
மைக்குறிவிழிக்குறவஞ்சிவந்தனளே.

இதுவுமது-விருத்தம்.

சிலைநுதலிற்கஸ்தூரிதிலதமிட்டுநறுங்குழலிற்கெச்சைசூடிக் [தாங்கி
கொலைமாதர்க்கண்மையெழுதிமாத்திரைக்கோல்வாங்கிமனுக்கூடை
முலைமுகத்திற்குன்றிமணிவடம்பூண்டுதிரிகூடமுதல்வாசரால்
மலைதனிற்போனவஞ்சிகுறவஞ்சியபரஞ்சிகொஞ்சிவருகின்றாளே.

தரு-இ-ம்-தோடி-சாப்புதாளம்.

பல்லவி.

வஞ்சிவந்தனளே-மலைக்குற-வஞ்சிவந்தனளே.

அநுபல்லவி.

வஞ்சியெழிலபரஞ்சிவரிவிழிநஞ்சிமுழுமறநஞ்சிபலவினை
வஞ்சிசடைமுடிவிஞ்சையமலனைநெஞ்சினினைவொடுமிஞ்சுகுறிசொல.

சரணங்கள்.

வல்லிநிகர்முலை யில்லையெனுமிடை வில்லைபணிநுதல்முல்லைபெருநகை, வல்லியெனவொரு கொல்லிமலைதனில் வல்லியவளினும் மெல்லியிவளென, ஒல்லிவடகனடில்லிவரைபுகல் புல்லில்வருகுறிசொல்லிமதுரித, நல்லிபனிமலை வல்லிகுழன்மொழிச் செல்வியுணர்பவர் கல்விமலைக்குற வஞ்சி

குன்றிலிடுமழை மின்மிகளெனநிரை குன்றிவடமுலை முங்கவே, மன்றல்கமழ்சிறு தென்றல்வருவழி நின்றுதாளமிலங்கவே, ஒன்றிலிரதியுமொன்றில்மதனனு மூசலிடுகுழைபொங்கவே, என்றுமெழுதியமன்றில்நடமிடுகின்றசரணினர் வென்றிமலைக்குற வஞ்சி

ஆடுமிருகுழைதோடுமொருகுழற் காடுமிணைவழிசாடவே, நோடுபொருமுலைமூடுசலவயி றாடுபிதிங்கிமலாடவே, தோடுமுரளிவராளிபயிரவிதோடி பெறவிரைபாடியே, நீடுமலையிலாடுமலைமதி சூடுமலைதிரிகூடமலைக்குற வஞ்சி

குறத்தியை வர்ணித்தல்.

கொச்சகக்கலிப்பா.

முன்னங்கிரிவளைத்த முக்கணர்குற்றாலர்வெற்பில்
கன்னங்கரியகுழற் காமக்குறவஞ்சி

பொன்னின்குடம்போற் புடைத்தெழுந்தபாரமுலை
யின்னம்பருத்திட்டா லிடைபொறுக்கமாட்டாதே.

தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

வஞ்சிவந்தாள்-மலைக்குற-வஞ்சிவந்தாள்.

அநுபல்லவி.

வஞ்சிவந்தாள்திரிகூடரஞ்சிதமோகினிமுன்னே
மிஞ்சியவிரகநோய்ச் சஞ்சீவிமருந்துபோலே — வஞ்சி

சரணங்கள்.

மும்மையுலகெங்கும்வெல்லக் கொம்மைமுலையார்க்கும்நல்ல
செம்மையாய்குறிகள்சொல்ல அம்மேயம்மேஎன்றுசொல்ல — வஞ்சி

சோலையில்வசந்தகாலம்வால்ம் வாலகோகிலம்வந்தாற்போல்
கோலமலைவில்லியார் குற்றாலமலைவாழுங்குற — வஞ்சி

மாத்திரைக்கோலதுதுன்னச் சாத்திரக்கண்பார்வைபன்னத்
தோத்திரவடிவமின்னப் பூத்தமயிர்கொடியென்ன — வஞ்சி

வசந்தவல்லி குறத்தியைக்கண்டு மலையை வினவுதல்.

ஆசிரிய விருத்தம்.

அந்தரதுந்துமிமுழங்குநன்னரர்க்குற்றாலலிங்கரருளைப்பாடி
வந்தகுறவஞ்சிதன்னைவசந்தவல்லிகண்டுமனமகிட்சிகொண்டு
சந்தமுலைத்துவளுமிடைத்துவளநடைப்பவளவிதழ்தையலேயுன்
சொந்தமலையெந்தமலைவளர்ந்தமலை வளமெனக்குச்சொல்லென்றனே.

குறத்தி சொல்லல்.

இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

வானரங்கள்கனிகொடுத்து மந்தியொடுகொஞ்சம்
மந்திசிந்துகனிகளுக்கு வான்கவிகள்கொஞ்சம்

கானகர்கள்விழியெறிந்து வானவரையழைப்பார்
கமனசித்தர்வந்துவந்து காயசித்திவிளைப்பார்

தேனருவித்திரையெழும்பி வானின்வழியொக்கும்
செங்கதிரோன்பரிக்காலுந் தேர்க்காலும்வழுக்கும்

கூனவிளம்பிறைமுடித்த வேணியலங்காரர்
கொற்றவர்வாழ்திரிகூட மலையெங்கள்மலையே.

முழங்குதிரைப்புனலருவி கழங்கெனமுத்தாடும்
முத்தமெங்கும்பரந்து பெண்கள்சிற்றிலைகொண்டாடும்
கிழங்குகிள்ளித்தேனெடுத்து வளம்பாடிநடப்போம்
கிம்புரியின்கொம்பொடித்து வெம்புதினையொடிப்போம்
செழுந்திலங்குதேமாவின் பழங்களைப்பந்தடிக்கும்
தேனலர்சண்பகவாசம் வானுலகம்வெடிக்கும்
வழங்குகொடைமகாராசர் குறும்பலவிலீசர்
வளரும்பெருகுந்திரிகூட மலையெங்கள்மலையே.

ஆடுமாவினிமணி கோடிவெயிலெறிக்கும்
அம்புலியைக்கவளமென்று தும்பிவழிமறிக்கும்
வேடுவர்கள்தினைவிரைக்கச் சாடுபுனந்தோறும்
விந்தையகில்குங்குமமுஞ் சந்தனமும்நாறும்
காடுதொறுமோடிவரை யாடுகுதிபாயும்
காகமணுகாமலையில் மேகநிரைசாயும்
நீடுபலவீசர்கையி லாசகிரிவாசர்
நிலைதங்குந்திரிகூட மலையெங்கள்மலையே.

கயிலையெனும்வடமலைக்குத் தெங்குமலையம்மே
கனகமகமேருவென நிற்குமலையம்மே
சயிலமலைதென்மலைக்கு வடக்குமலையம்மே
சகலமலையென்றனக்குள் ளடக்கமலையம்மே
வயிரமுடன்மாணிக்கம் விளையுமலையம்மே
வானிரவிமழைகள்தொறு நுழையுமலையம்மே
துயிலுமவர்விழிப்பாகி யகிலமெங்குந்தேடும்
துங்கர்திரிகூடமலை யெங்கள்மலையம்மே.

கொல்லிமலையெனக்கிளைய செல்லிமலையம்மே
கொழுநனுக்காணிமலை பழனிமலையம்மே
எல்லுலவும்விந்தைமலை யெந்தைமலையம்மே
இமையமலையென்னுடைய தமையன்மலையம்மே
சொல்லரியசாமிமலை மாமிமலையம்மே
தோழிமலைநாஞ்சிநாட்டு வேழ்விமலையம்மே
சொல்லினங்கள்முழவுகொட்ட மயிலினங்களாடும்
திரிகூடமலையெங்கள் செல்வமலையம்மே.

ஒருகுலத்திற்பெண்கள்கொடோம் ஒருகுலத்திற்கொள்ளோம்
உறவுபிடித்தாலும்விடோம் குறவர்குலம்நாங்கள்
வெருவிவருந்தினைப்புனத்திற் பெருமிருகம்விலக்கி
வேங்கையாய்வெயில்மறைத்த பாங்குதனைக்குறித்தே

அருளிலஞ்சி வேலர்தமக் கொருபெண்ணைக்கொடுத்தோம்
ஆதினத்துமலைகளெல்லாஞ் சீதனமாய்க்கொடுத்தோம்.
பருதிமதிசூழ்மலையைத் துருவனுக்குக்கொடுத்தோம்
பரமர்திரிகூடமலை பழையமலையம்மே.

வசந்தவல்லி-குறத்தியை-நாட்டுவளமும்-நகர்வளமும்-வினவுதல்.

விருத்தம்.

கேட்டுவளமுனநாட்டுக்கொடியின் வளர்பிடைகாட்டுகுறிஞ்சிபூத்த
காட்டுவளங்குழல்காட்டுமலைவளர்தானியுரைத்துக்காட்டுவானேன்
தோட்டுவளம்புரிகாதர்திரிகூடமலைவளந்தோகையேயுன்
னாட்டுவளமெனக்குரைத்துகுற்றாலத்தலவளமுநவிலுவாயே.

குறத்தி-சொல்லுதல்.

இ-ம்-கேதாரகௌளம்-தாளம்சாப்பு.

கண்ணிகள்.

சூரமாங்குயிற்சின்னங்காமத்துரைவந்தான் துரைவந்தானென்று
ஆரமாமுலைமின்னார்வரல்குற்றேர்களலங்காரஞ்செய்யப்
பாரமாமதிவெண்குடைமிஞ்சப்பரக்குங்கிள்ளைப்பரிகள்மீன்கொஞ்சத்
தேரின்மாரன்வசந்தனுலாவுந்திருக்குற்றாலர்தென்னாரியநாடே.

காரைச்சேர்த்தகுழலார்க்குநாணிக்கடலைச்சேர்ந்தகறுப்பானமேகம்
சேர்ந்தமுலைக்கிணையாகுமலையைச்சேர்ந்துடலையொன்றுவாங்கி [ன்
நீரைச்சார்ந்தாரையம்பொடுநிலக்கொண்டலின்தேறேறிவெய்தியோ
தேரைச்சூழ்ந்திடக்கார்காலம் வெல்லுதிருக்குற்றாலர்தென்னாரியநாடே.

கூழைவசற்பலாவினிற்பாய்க்கொழும்பலாக்கனைவழையிற்சாயல்
வாழைசாய்ந்தொருதாழையிற்றுக்கவருவிருந்துக்குபசரிப்பார்போல்
தாழைசோரிடதாழைகுடுத்திடுஞ்சந்திரசூடர்தென்னாடே.

அன்னலார்மொழிதன்னைப்பழித்ததென்றூடவர்மண்ணின்மூடுகரும்பு
துன்னியமீளர்ந்துமடந்தையர்தோளைவென்று சுடகமுத்தீயன்று
பின்னுமங்கவர்மூரலைவென்றுபிரியுங்காலத்திற்பெண்மையைவெல்ல
கன்னல்வேளுக்குவில்லாகவோங்குங்கடவுளாரியநாடெங்கணுமே.

தக்கபூமிக்குமுன்புள்ளநாடுசகலதேவர்க்குமன்புள்ளநாடு
மூக்கண்ணன்விளையாடியநாடு மூவர்பாடிப்புகழ்ந்திட்டநாடு
திக்கெல்லாம்வளர்ந்தோங்கியநாடுசிவத்துரோகமுநீங்கியநாடு
மைக்கண்ணாள்குழல்வாய்மொழிபாகர்வசந்தவாரியநா டெங்கணுமே.

அஞ்சுநூறுமகங்கண்டநாடு அனேகங்கோடியுகங்கண்டநாடு
கஞ்சயோனியுதிக்கின்றநாடு கமலவாணிதுதிககின்றநாடு
செஞ்சொன்மாமுனியேகியநாடு செங்கண்மால்சிவனுகியநாடு
வஞ்சிபாத்திரிகூடநாதர்வசந்தவாரியநாடெங்கணுமே.

மாதமூன் றுமழையுள்ளநாடு வருஷமூன் றுவிளைவுள்ளநாடு
வேதமூன் றும்பலிவுள்ளநாடு விசேஷமூன் றுங்குலாவுள்ளநாடு
போதமூன் றுநவஞ்செய்யுநாடு புவனமூன் றும்வலஞ்செயுநாடு
நாதமூன் றுவானகுற்றாந்தவாரியநாடெங்கணாடே.

நீங்கக்காண்பதுசேர்ந்தவாபாவம்நெருங்கக்காண்பதுகன்னலிற் செந்நெல், தூங்கக்காண்பதுமாம்பழக்கொத்துசுழலக்காண்பது தீந் தயிர்மத்து, வீங்கக்காண்பதுமங்கையர்கொங்கை வெடிக்கக்காண் பதுசொல்லையின்மில்லை, ஏங்கக்காண்பதுமங்கலபேரிகை யீசராரிய நாடெங்கணாடே.

ஓடக்காண்பது ஆம்புனல்வெள்ளம்ஒடுங்கக்காண்பது யோகியருள்ளம்
வாடக்காண்பதுமின்னார்மருங்குல் வருந்தக்காண்பதுசூலுளைச்சங்கு
போடக்காண்பதுபூமியிலழித்து புலம்பக்காண்பதுகிண்ணிக்கொத்து
தேடக்காண்பதுநல்லறக்கீர்த்தி திருக்குற்றாலர்தென்னாரியநாடே.

குறத்தி தலமகிமை சொல்லுதல்.

விருத்தம்.

அரிகூடவயன்கூடமறைகூடதினந்தேடவரிதாய்நின்ற
திரிகூடப்பதியிருக்குந்திருநாட்டுவளமுரைக்கத்தெவிட்டாதம்மே
கரிகூடப்பிடிதிரியுஞ்சாரலிலேயொருவேடன்கைவில்லேந்தி
நரிகூடக்கைலைசென்ற திரிகூடத்தலமகிமைநவிலக்கேளே.

இ-ம்-பிலகரி-தாளம்-ஜம்பை.

கண்ணிகள்.

ஞானிகளுமறியார்கள்சிகரநதிமூல
 நானறிந்தவகைகளிதுசொல்லக்கேளம்மா
மேன்மைபெருந்திரிகூடத்தேனருவித்துறைக்கே
 மேவுமொருசிவலிங்கத்தேவரகசியமாய்
ஆனதுரையபனுமுரைத்தானுமறியாமல்
 அருந்தவத்துக்காய்த்தேடித்திரிந்தலையுங்காலம்
மேலானவானவர்க்கெங்கள்கானவர்கள்காட்டு
 மூதுகங்கையாறுசிவமாதுகங்கையாராரே.

சிவமதுகங்கையின்மகிமைபுவனமெங்கும்புகழும்
 செண்பகாடவித்துறையின்பண்புசொல்லக்கேளாய்
தவமுனிவர்கூட்டுறவும்வரிக்குந்திசையுஞ்
 சஞ்சீவிமுதலானவிஞ்சைமூலிகையும்
கவனசித்தராகியருமௌனயோகியருங்
 காத்திருக்குங்கயிலாயமேற்றிருக்குமம்மே
நவநிதியும்விளையுமிடம்விடமதுகடந்தால்
 நங்கைமார்குரவையொலிபொங்குமாகடலே.

பொங்குகடல்திரிவேணிசங்கமெனச்செழிக்கும்
    பொருந்துவசித்ரநதித்துறையிற்பொன்னுழுத்துங்கொழிக்கும்
கங்கையென்றவடவிருதக்குந்திரசாபம்
    கலந்தாடக்கழிநீராய்த்தொலைந்தோடும்பாதம்
சங்கைவீதியிற்பறந்துசங்கினங்கள்மேவும்
    தழைத்தமதியிற்சிகரமெங்குந்தொழுதக்கயல்பாயும்
கொங்கலர்செண்பகசோலைசூழும்பலவாவீசா
    குற்றாலத்திரிகூடத்தலமெங்கள்தலமே.
மன்றுதனில்தெய்வமுற்றென்றுமேன்முழங்கும்
    வளமைபெறுஞ்சதுர்யுகம்மகிமையெனவழங்கும்
ஈன்றமதகரிபூசையன்றுசெய்ததலமே
    நிந்தசெய்யுட்பதந்தன்வந்தனைசெய்தவலமே
பன்றியொடுவேடன்வலஞ்சென்றநிந்தத்தலமே
    பற்றாகப்பரமருறைகுற்றாலத்தலமே
வென்றிபெறுந்தேவர்களுங்குன்றமால்மரமாம்
    மிருகமதாய்த்தவசிருக்கும்பெரியதலமம்மே.

வசந்தவல்லி-கிளிவினவுதல்.

விருத்தம்.

தீர்த்தவிசேடமுந்தலத்தின் சிறந்தவிசேடமுமுரைத்தாய்திருக்குற்றால, மூர்த்திவிசேடந்தனையுமொழிதோறுநீயறைந்த முறையால் கண்டேன், வார்த்தைவிசேடங்கள்கற்ற மலைக்குறவஞ்சிக்கொடியே வருக்கைவாச, கீர்த்திவிசேடமும்பெரிய கிளிவிசேடத்தையுநீ கிளர்த்துவாயே.

குறத்தி-சொல்லுதல்.

இ-ம்-முகாரி-ஏகதாளம்.

கண்ணிகள்.

குற்றாலக்கிளைகளதைக்கூறக்கேளம்மா
    குலம்பார்க்கில்தேவரினும்பெரியகுலங்கண்டாய்
பெற்றதாய்தந்தைதனையுற்றுநீகேட்கில்
    பெண்கொடுத்தமலையரசன்றனைக்கேட்கவேண்டும்
உற்றதொருபனிமலையின்கொற்றவேந்தனுக்கும்
    உயர்மதுரைமாறனுக்குஞ்செய்மருகர்கண்டாய்
வெற்றிபெரும்பாற்கடலிற்புற்றரவினுறங்கும்
    வித்தவர்க்குக்கண்ணுனைமைத்துனர்தானம்மே.
ஆனைவாகனத்தார்க்கும்வானுலகிலிருக்கும்
    ஆகுவாகனத்தார்க்கும்வானுலகிலிருக்கும்
தானையாற்றந்தைகாலெறிந்தமகனுற்குந்
    தருகாழிமகனுர்க்குந்தகப்பனுரைக்கண்டாய்

சேனைமகபதிவாசலானைபெறும்பிடிக்குந்
 தேனீன்றமலைச்சாரல்மானீன்றகொடிக்குங்
கானமலர்மேலிருக்குமோனவயனார்க்குங்
 காமனார்தமக்குமிவர்மாமனாரம்மே.

பொன்னுலகிற்றேவருக்குமன்னுலகத்தவர்க்கும்
 பூதலத்தின்முனிவருக்கும்பாதலத்துள்ளார்க்கும்
அன்னவடிவெடுத்தவர்க்குமேனவுருவானவற்கும்
 அல்லார்க்குமன்னுதித்தசெல்வர்காணம்மே
முன்னுதித்ததுவந்தவகைத்தமயனெனவுரைப்பார்
 மொழிந்தாலுமொழியலாம்பழுதில்லைகாணம்மே
நன்னகரிகுற்றாலநாதர்கிளைவளத்தை
 நானுரைப்பதரிதுலகுதானுரைக்கவம்மே.

வசந்தவல்லி-வினவுதல்.

விருத்தம்.

நீர்வளர்பவளமேனிநிமலர்குற்றாலநாதர்
கூர்வளம்பாடியாடுங்குறவஞ்சிகொடியேகேளாய்
கார்வளர்குழலார்க்கெல்லாங்கருதிநீவிருதாய்ச்சொல்லும்
சீர்வளர்குறியின்மார்க்கந்தெரியவேசெப்புவாயே.

குறத்தி-சொல்லுதல்.

தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

வித்தாரமென்குறியம்மே-மணி

அநுபல்லவி.

முத்தாரம்பூணுமுகிழ்முலைப்பெண்ணே
 வித்தாரமென்குறியம்மே

சரணங்கள்.

வஞ்சிமலையொடு	கொஞ்சி	கொங்கு
மக்காரடந்துலுக்கணே	மெச்சி	
செஞ்சிவடகாசி	நீளம்	சீனஞ்
சிங்களமீழம்	கொழும்புவங்காளம்	
தஞ்சைசிராப்பள்ளிக்	கோட்டை	தமிழ்ச்
சங்கமதுரைதென்	மங்கப்பேட்டை	திசை
மிஞ்சிகுறிசொல்லிப்	பேராய்	திசை
வென்றுதான்பெற்றவிருதுகள்பாராய்		வித்தார

நன்னகர்க்குற்றாலம்தன்னில் எங்கும்
 நாட்டுமெண்ணூற்றொன்பத்தோராண்டுதன்னில்

பன்னகமாமுனி போற்றத் தமிழ்ப்
பாண்டியனாடுமுதற்சிற்றோடுமேந்த
தென்னாருஞ்சித்ர சபையை எங்க
சிண்ணஞ்சாதேவன்செப்போடுமேய்ந்த
முன்னாளில்குறி சொல்லிப் பெற்ற
மோகனமாலைபார்மோகன வல்லி வித்தார
அன்பாய்வடகுண பாலில் சொல்லத்
தாண்டொருநானூற்றிருபத்துநாலில்
தென்காசியாலய மோங்கக் குறி
செண்பகமாரற்குச்சொன்னபேர் நாங்கள்
நன்பாண்டியராச்சிய முய்ய சொக்க
நாயகர்வந்துமணக்கோலஞ் செய்ய
இன்பதுரைமீ னாட்சி அன்று
யெங்களைக்கேட்டதுஞ்சங்கத்தார் சாட்சி வித்தார

வசந்தவல்லி-குறி கேட்குதல்.

விருத்தம்.

கலவிக்குவிழிவாள்கொண்டு காமனைசிங்கிகொள்வாய்
குலவிக்கைகுறியேயானாற் குறவஞ்சிகுறைவைப்பாயோ
பலவுக்குள்கணியாய்நின்ற பரமர்குற்றாலநாட்டில்
இலவுக்குஞ்சிவந்தவாயா லெனக்கொருகுறிசொல்வாயே.

குறத்தி-சொல்லல்-இ-ம்-அடாணா-ஆதிதாளம்.

கண்ணிகள்.

என்னகுறியாகிலுநான்சொல்லுவே னம்மே-சது
ரேறுவேனெதிர்த்தபேரைவெல்லுவே னம்மே
மன்னியர்கள்மெச்சுங்குறவஞ்சியா னம்மே-என்றன்
வயிற்றுக்கித்தனைபோதங்கஞ்சிவா ரம்மே
பின்னமின்றிக்கூழானாலுங்கொண்டுவா வம்மே-வந்தால்
பெரியசுரைக்குடுக்கைமட்டுமுண்ணுவே னம்மே
தின்னவிலையும்பிளவுமள்ளித்தா வம்மே-கப்பல்
சீனச்சரக்குந்துக்கிணிகிள்ளித்தா வம்மே
அம்மேயம்மேசொல்லவாராய்வெள்ளச்சி வம்மே-உனக்
காக்கம்வருகுதுபாராய்வெள்ளச்சி யம்மே
விம்முமுலைகன்னிசொன்னபேச்சுநன் றம்மே-நேரே
மேற்புரத்திலாந்தையிட்டவீச்சன்ன வம்மே
தும்மலுங்காகமுமிடஞ்சொல்லுதே யம்மே-சரம்
சூட்சமாகப்பூரணத்தைவெல்லாதே யம்மே
செம்மையிதுநன்னிமித்தங்கண்டுபா ரம்மே-திரி
கூடமலைதெய்வமுனக்குண்டுபா ரம்மே

இதுவுமது-குறத்தி சொல்லுதல்.

விருத்தம்.

பல்லியும்பலபலென்னப் பகருதுதிரிகூடத்திற்
கல்விமான்சிவப்பின்மிக்கான் கழுத்தின்மேன்மருவுமுள்ளான்
நல்லமேற்குலத்தானிந்த நன்னகர்தலத்தனுக
வல்லியேயுனக்குநல்ல மாப்பிள்ளைவருவானம்மே.

இதுவுங்-குறத்தி சொல்லுவது.

ஸ்ரீராகம்-அடதாளசாப்பு.

கண்ணிகள்.

தரைமெழுகுகோலமிடுமுறை பெறவேகணபதியைம்மே-குட
தாங்காமுப்பழம்படைப்பாய் தேங்காயுமுடைத்துவைப்பாயம்மே
அறுகுபுனல்விளக்கிடுவா படைப்பாய்வெள்ளிலைகொடுவாயம்மே
வடைஅப்பம்வலர்க்கவரை யொப்பெறிவையம்மே.
நிறைநாழியளந்து வைப்பாயிறையோனை கரங்குவிப்பாயம்மேகுறி
நிலவரத்தைதேர்ந்துகொள்வாய்குலதெய்வத்தைநேர்ந்துகொள்வாயம்மே.

குறிசொல்லவாகுறிசொல்லவா யிரைநுதலேகுறிசொல்ல்வாவம்மே
ஐவர்-குறும்பறவர்திருவுளத்தார் பெரும்பலனுங்குறிசொல்லவா [யம்மே
ஆனேறுசெல்வர்திரிகூட நாதரணிநகர்வாழ்
மானேவசந்தபசுங்கொடியே வந்தவேளைநன்றே
தானேயிருந்தலமுநன்றே செழுந்தாமரைப்போற்
காடென்றுகைம்மலர்காட்டாய் எனக்குறிநாட்டுதற்கே.

இ-ம்-கல்யாணி-சாப்புதாளம்-கண்ணிகள்.

முத்திரைமோதிரமிட்ட கையைக்காட்டாயம்மே
முன்கைமுதாரியிட்ட கையைக்காட்டாயம்மே
அஸ்தகடகம்புனைந்தகையைக் காட்டாய்-பொன்னி
னலங்காரநெளியிட்ட கையைக்காட்டாய்
சித்திரைச்சூடகமிட்ட கையைக்காட்டாய்-பசுஞ்
செங்கைமலர்த்தங்க ரேகையைக்காட்டாய்
சத்திபீடத்திறைவர் நன்னகர்க்குள்ளேவந்த
சஞ்சீவியேயுனது கையைக்காட்டாய்

கொச்சகக் கலிப்பா.

ஏழைப்பங்கர்செங்கைமழு வேற்றவரகுற்றாலர்வெற்பில்
வாழிகொண்டமோகவந்த வல்லியைப்பார்த்து
வாழிகொண்டுசெங்கனிவாய் மிக்ககுறவஞ்சிபழங்
கூழையுண்டவாயார் குறியைமீண்டுசொல்வாளோ.

குறத்திசொல்லுதல்-இ-ம்-பைரவி-ரூபகதாளம்.

கண்ணிகள்.

மாரூமலிருநிலத்தி லறம்வளர்க்குங்கையே
மனையறத்தாலறம்பெருக்கித் திறம்வளர்க்குங்கையே
வீரூகநவநிதியம் விளையுமிந்தக்கையே
மேன்மேலும்பாலமுத மளையுமிந்தக்கையே
ஆரூதசனங்கள்பசி யாற்றுமிந்தக்கையே
அணங்களையார்வணங்கிநிதம் போற்றுமிந்தக்ககையே
பேரூகநன்னசரங் காக்குமிந்தக்கையே
புறவாதநெறிதார்க்கை யேற்குமிந்தக்கையே

குறத்தி தெய்வம்பரவல்.

விருத்தம்.

கைக்குறிபார்க்கிலிந்தக் கைப்பிடிப்பவர்தாமெட்டுத்
திக்குமேயுடையராவர் ஜெகமகராசிநீயே
இக்குறிபொய்யாதென்றே யிறையவர்திரிகூடத்தில்
மெய்க்குறவஞ்சிதெய்வம் வியப்புறவணங்குவாளே.

ஆசிரியப்பா.

குழல்மொழியுதித்தார் குறும்பலவுடையார்
அழகுசந்நிதிவாழம்பலவிநாயகர்
செந்தில்வாழ்முருகா செங்கண்மால்மருகா
கந்தனேயிலஞ்சிக் கடவுளேசரணம்
புள்ளிமானீன்ற பூவையேகுறக்குல
வள்ளிநாயகியே வந்தெனக்குதவாய்
அப்பனேமேலை வாயலிலரசே
செப்பருமலைமேற் றெய்வகன்னியர்கள்
ஆரியங்கரவா வருட்சொரிமுத்தே
நேரியகுளத்தூர் நின்றசேவகனே
கோலமாகாளி குற்றாலநங்காய்
காலவைரவா கன்துடி கறுப்பா
முன்னடிமுருகா வன்னியாரையா
மன்னியபுலிபோல் வரும்பன்றிமாடா
எக்காலதேவி திர்க்கைபிடாரி
யிக்கதோர்குறியாய் வேண்டினனுங்களை
வந்துமுன்னிருந்து வசந்தமோகினிப்பெண்
சிந்தையில்நினைத்தது சிவனோபொன்னோ
சலவையோபட்டோவசதானியமா
கலவையோபுழுகோ களபகஸ்தூரியோ

வட்டிலோசெம்போ வயிரமோமுத்தோ
கட்டிலோமெத்தையோ மண்டிவிராகனோ
வைப்பொடுசெப்போ வரத்தொடுசெலவோ
கைப்படுதிரவியங் களவுபோனதுவோ
மருவிலாப்பெண்மயில் வந்திருஷ்டிதோஷமோ
திரிகண்ணரானவர் செய்தகைமயக்கமோ
மன்னர்தாமிவள்மேல் மயல்சொல்லிவிட்டதோ
கன்னிதானொருவர்மேற் காமித்தகுறியோ
சேலையும்வளையுஞ் சிந்தினதியக்கமோ
மாலையுமணமும் வரப்பெருங்குறியோ
அத்தனைகுறிகளி லிவள்குறியிதுவென்ன
வைத்தோர்குறியை வகுத்தருள்வீரே.

குறத்திசொல்-விருத்தம்.

கடித்திடுமரவல்பூண்ட கருத்தர்குற்றாலநேசர்
பிடிக்குதுகருத்துநன்றாயப் பேசுதுசக்திதேவி
குடிக்குதென்றுகடுநாவுஞ் சொல்லென்றுவாயில்
இடிக்குதுகுறளியம்மே யினிக்குறிசொல்லக்கேளே.

குறத்திசொல்லுதல்-இ-ம்-பிலஹரி-சாப்புதாளம்.

கண்ணிகள்.

சொல்லக்கேளாய்குறிசொல்லக்கேளாயம்மே
தோகையர்க்கரசேகுறி சொல்லக்கேளாய்
முல்லைபூங்குழலாளே நன்னகரில்வாழ்முத்து
மோகனப்பசுங்கிளியே சொல்லக்கேளாய்
பல்லக்கேறுந்தெருவி லானைநடத்திமணிப்
பணியாபரணம்பூண்ட பார்த்திபன்வந்தான்
செல்வப்பூங்கோலத்தையே நீகண்டடிக்கையிலவன்
சேனைகண்டவெருட்போல்காணுதேயம்மே

வசந்தவல்லிசொல்-இ-ம்-பந்துவராளி-திருபுடைதாளம்.

கண்ணிகள்.

கன்றுநன்றுகுறவஞ்சிநடக்ககாரி இந்த
நாட்டானபேர்க்கானநானறியேனே
ஒன்றுகொடாதேகுறிசொல்லியேவந்தாய் பின்னை
யுழப்பிப்போட்டாயடிகுறியுங்குழப்பிப்போட்டாய்
மன்றில்வருஞ்சேனைதன்னைக்கண்டுபயந்தால் இந்த
மையலுங்கிறுகிறுப்பைத்தையலர்க்குண்டோ

இன்றுவரையேகுளிருங்காச்சலுண்டே-பின்னே
யென்றுகுறிகண்டுசொல்லடி.

குறத்தி சொல்லுதல்.

கண்ணிகள்.

வாகனத்திலேறிவரும்யோகபுருஷன்-அவன்
வாங்காரப்பவனியாசைபெண்களுக்குள்ளே
தோகைநீயவனைக்கண்டுமோகித்தாயம்மே-அது
சொல்லப்பயந்தேயிருந்தேன்சொல்வேன்முன்னே
காகமணுகாததிரிகூடமலைக்கே-உன்மேல்
காய்ச்சலல்லகாய்ச்சலல்லகாமகாய்ச்சல்காண்
மோகினியேயுன்னிபற்கிறுகிறுப்பெல்லாம்
மோகக்கிணறுப்படிமோகனக்கள்ளி.

வசந்தவல்லி சொல்லுதல்.

கண்ணிகள்.

கன்னியென்றுநானிருக்கநன்னகர்க்குள்ளே
காமியென்ருய்குறவஞ்சிவாய்மதியாமல்
சன்னேயாகச்சொன்னேன்குறிசாதிப்பையானல்-அவன்
தாருஞ்சொல்லிப்பேருஞ்சொல்லியூருஞ்சொல்லடி.

குறத்தி சொல்லுதல்.

கண்ணிகள்.

உன்னைப்போலெனக்கவனறிமுகமோ
ஊரும்பேருஞ்சொல்வதுங்குறிமுகமோ
பின்னையுந்தானுனக்காகச்சொல்லுவேனம்மே
பெண்சேரவல்லவன்காண்பெண்கட்கரசே.

வசந்தவல்லி சொல்லுதல்.

கண்ணிகள்.

வண்மையோவாய்மதமோவித்தைமதமோ-என்முன்
மதியாமல்பெண்சேரவல்லவனென்ருய்
கண்மயக்காதேயுண்மைசொல்லடி
கானமலைக்குறவஞ்சிக்கன்னிமயிலே.

குறத்தி சொல்லுதல்.

கண்ணிகள்.

பெண்ணரசேபெண்ணென்ருல்திரியுமொக்கு-மொரு
பெண்ணுடனேசேரவென்ருல்கூடவுமொக்கும்

திண்ணமாகவல்லவனுநாதனுமொக்கும்-பேரைத்
திரிகூடநாதரென்றேசெப்பலாமம்மே.

கலிகூற்று.

மன்னர்திரிகூடநா ரென்னும்போதிலே-முகம்
மாணிக்கவசந்தவல்லிநாணிக்கவழ்ந்தால்.

குறத்தி சொல்லுதல்.

கண்ணிகள்.

நன்னகரிலீசருன்னைமேவவேவாரார்-இந்த
நாணமெல்லாம்நாளைநானும்காணவேபோறேன்
கைநொடியிற்பொன்னிதழிமாலைவிருச்சா-ணினி
கக்கத்திலிடுக்குவாயுன்வெட்கத்தையம்மே
உன்னுமொருகுறவஞ்சிதன்னையழைத்தே-அரு
கிட்டுசருவாபரணம்பூட்டினளே.

சிங்கன் வருதல்-விருத்தம்.

நாமாலைதிரிகூடப்பரமரருள்பெறவசந்தப்பாவைகூந்தப்
பூமாலையிதழிபெறப்பொன்மாலைமணிமாலைபொலிவாய்ப்பூண்டு
மாமாலைக்குறவஞ்சிநன்னகர்பட்டணமுழுதும்நடக்குநாளில்
பாமாலைபூண்டசிங்கன்வணங்கச்சிங்கியைத்தேடிவருகின்றானே.

இதுவுமது-விருத்தம்.

வக்காவின்மணிபூண்டுகொக்கிறகுசிகைமுடித்துவரித்தோற்கச்சை
தொக்காகவரிந்திறுத்தித்தொடர்புலியைக்கண்டுறுக்கித்தூணிதூக்கிக்
கைக்கானவாயுதங்கள்கொண்டுசில்லிக்கோலெடுத்துக்கண்ணிசேர்
திக்கடங்காக்குளுவசிங்கன்குற்றாலத்திரிகூடச்சிங்கன்வந்தான்.

இதுவுமது-விருத்தம்.

வக்காவின்மணிசூடிவகைக்காரிசிங்கிவரும்வழியைத்தேடி
துக்கானபுலிகரடிகிடுகிடெனநடுநடுங்கவெறிந்துநோக்கிக்
கக்காவென்றேலமிடுங்குருவிகொக்குக்கேற்றகண்ணிகையில்வாங்கி
தொக்காகநடைநடந்துதிரிகூடமலைக்குறவன்தோன்றினனே.

இ-ம்-அடாணா-சாப்புதாளம்-கண்ணிகள்.

கொக்கிறகுசூடிக்கொண்டுகுருவிவேட்டையாடிக்கொண்டு
விக்காவின்மணிபூட்டிக்கொண்டுமடவார்கண்போலீட்டிக்கொண்டு
தோக்கால்கச்சையிறுக்கிக்கொண்டு துள்ளுமீசைமுறுக்கிக்கொண்டு
தக்கடங்கரக்குளுவரங்கன் திரிகூடச்சிங்கன்வந்தான்.

சிங்கன் சொல்லுதல்.

விருத்தம்.

ஆளிபொற்பயந்தசுரும்பிசைகேட்குந் திரிகூடத்தவளர்நாட்டில்
வேளைதொறும்புகுந்துதிருவிளையாட்டங்கண்ணிகுத்திவேட்டையாடி
ஞாளிபோற்சுவடெத்துப் பூனைப்போலொளிபோட்டுநரிபோற்பம்மிக்
கூளிபோற்றொடர்ந்தடிக்குந் திரிகூடற்பெரியசிங்கக்குமரநானே.

இ-ம்-தன்னியாசி-ஆதிதாளம்-கண்ணிகள்.

தெருக்கறியார்மூவரிற்றெரியார் சித்திரசபையார் சித்திரநதிசூழ் கோவிலிற்புறவில் காவலிலங்காக்குருவிகள்படுக்குங் குறவனு நானே.

காதஞ்செழுத்தாற்போத நீறணியார் கைந்நரம்பெடுத்துக்கின்னரந் தொடுத்துய்யாகுகர்தோலால் பலவிதமடித்துப் பறவைகள் படுக் கும் குறவனும்நானே.

தலைதனிற் பிறையார்பலவினிலுறைவார் தாளிணைவணங்கார்சிகை தனைப்பிடித்தே பலமயிர்நறுக்கிச் சிலகண்ணு மிதுக்கிப் பறவை கள் படுக்குங் குறவனும்நானே.

ஒருகுழைச்சங்கம் ஒருகுழைச்சாதம் உரியவினோதர் திரிகூடநாதர் திருநடம்போற்றிதிருநீறுசாற்றிதிரிகூடநாமச்சிங்கனும்நானே.

நூவன் வருதல்.

விருத்தம்.

புலியோடுபுலியைத்தாங்கிப் போர்மதயானைசாய்க்கும்
வலியவர்திரிகூடத்தில் மதப்புலிச்சிங்கன்முன்னே
கவிகளுங்கதையும்பேசியிக் கயிலேயீட்டிவாங்கி
எலிகளைத்துரத்தும்வீர நீப்புலிநூவன்வந்தான்.

இ-ம்-அடாணு-சாப்புதாளம்.

கண்ணிகள்.

ஊர்க்குருவிக்குக் கண்ணியுங்கொண்டு உள்ளான்படுத்தது மெண் ணிக்கொண்டு மார்க்கமெல்லாம் பலபேசிக்கொண்டு கோட்கார நூவனும் வந்தானே.

கரிக்குருவிக்குக்கண்ணியங்கொண்டு காணுங்கோழிக்குப்பொரி யுங்கொண்டு வரிசிலைக்குறவரிற்கவுண்டன்வாய்ப்பான நூவனும் வந்தானே.

ஏகனைகாகனைக்கத்திக்கொண்டு எலியானைபுலியானை யேவிக்கொ ண்டுவாகைசிங்கனைமேவிக்கொண்டுவங்கார நூவனும்வந்தானே.

கொட்டகைத்தூண்போலக்காலிலங்க ஒட்டகம்போலேமேலிலங்கை
கட்டானதிரிகூடச்சிங்கன்மாட்டி மாயனும்நானே.

சிங்கன் பட்சிகளைப் பார்த்தல்.

விருத்தம்.

மூவகைமதிலுஞ்சாய மூரலால்விரஞ்செய்த
சேவகர்திருக்குற்ருலர் திருவிளையாட்டந்தன்னில்
பாலகமாகதுவன் பறவைபோற்பாவைகூவி
மாவினமேறிச்சிங்கன் வரும்பட்சிபார்க்கின்ருனே.

தரு-இ-ம்-கல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

வருகினுமையே-பறவைகள்-வருகினுமையே.

அநுபல்லவி.

வருகினுமையே திரிகூடநாயகர்
வட்டமில்லாப்பண்ணைப்பாட்டப்புறவெல்லாம்
குருகுநாரைபுமன்னமுந்தாராவும்
கூடைக்கிடக்களுஞ்செங்காலதாரையும் வருகினு

சரணங்கள்.

சென்னியிலேபுனற்கன்னியைவைத்த
திரிகூடநாதர்கிரிமாதுவேட்டையில்
பன்னஞெருவன்வரிசையிலேயானகங்கை
மங்கைக்குநானும்வரிசைசெய்வேயன்ன
அன்னதயவுடையாகாசகங்கை
யடுக்களைக்காணப்புறப்படுநேத்திபோல்
பொன்னியவானெங்குந்தன்னிறமாகப்
புரிந்துபுவனந்திரிந்துகுருகினம் வருகினு

காடைவருதுகம்புள்வருகுது
காக்கைவருகுதுகொண்டலாத்தியும்
மாடப்புருவுமயிலும்வருகுது
மற்ஞெருசாரியாய்க்கொக்குத்திரளெல்லாம்
கூடலையுள்ளாக்கிச்சைவம்புறம்பாக்கி
கூடுஞ்சகணரைநீடுங்கழுவேற்ற
ஏதடதிரேற்றியசம்பந்தமூர்த்திகள்
யிட்டதிருமுத்தின்பந்தருவந்தாற்போலே வருகினு

வெள்ளைப்புருவுஞ்சகோரமுமாந்தையும்
மீன்கொத்திப்புள்ளுமாங்கொத்திப்பட்சியும்
கிள்ளையும்பஞ்சவர்னக்கிளிகூட்டமுங்
கேரளப்பட்சியும்நாகணவாய்ச்சியும்

உள்ளானுஞ்சிட்டு வலியானுமன்றிலும்
ஓலஞ்செய்தேகூடி நாலேஞ்சுதோற்றமாம்
துள்ளாடுஞ்சூவக பாலர்பிராட்டியார்
தொட்டாடுமைவானப் பட்டாடைபோலவே. வருகினு

சிங்கன் சொல்.

ஈராயிரங்கரத்தானேற்ற சங்குநான்மறையும்
சீராயிரங்கனஞ்செய்தவர குற்றாலவெற்பில்
பாராய்பலமுகமும் பட்சிநிறைசாயுதையே
ஓராயிரமுகமும் பட்சிநிறைசாயுதையே.

தரு-இ-ம்-கல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

சாயினுமையே-பறவைகள்-சாயினுமையே

அநுபல்லவி.

சாயினுமையே பாயும்பறவைகள்
சந்தனக்காட்டுக்குஞ் சண்பகக்காவுக்கும்
கோயிற்குழல்வாய்மொழி மங்கைப்பேருக்குங்
குற்றாலநாயகர் சிற்றாற்றுவெள்ளம்போல். சாயி

சரணங்கள்.

காராருஞ்செங்குளமேலப்பாடுபற்றுக்
காடுவெட்டிப்பற்றுநீடுசுண்டைப்பற்று
சீராரும்பேட்டைக்குளப்பேடைக்காங்கேயன்
ஸ்ரீகிருஷ்ணன்மேடுமுனிக்குருகன்பேரி
வரிவாய்சீவலப்பேரிவடகர்
யிராசகுலராமன்கண்டுகொண்டான்மேலே
மாரிப்பற்றுங்கீழைமாரிப்பற்றுஞ்சன்
னேரிபற்றுஞ்சாத்தனேரிப்பற்றுஞ்சுற்றி. சாயி

பாறைகுளந்தெற்றுமேல்வழுதிக்குளம்
பாட்டைப்பெருங்குளஞ்செங்குறிஞ்சிக்குளம்
ஊருணிப்பற்றுந்திருப்பணிநீள
முயர்ந்தபுளியங்குளந்துவரைக்குளம்
மாறனேரிக்குளபளத்தளம்பாறை
வழிமறித்தான்குளமாலடிபற்றும்
ஆரணிகுற்றாலர்தோட்டச்செய்
அபிஷேகப்போரிக்கணக்கன்பற்றிலுஞ் சாயி

ஐயர்குற்றாலத்துநம்பியார்திருந்து
மப்பாலொருதாதன்குற்றாலப்பேரி

செய்யும்புலியூரிலஞ்சிமேலாகரஞ்
செங்கோட்டைசீவல்நல்லூர்சிற்றம்பலம்
துய்யகுன்றக்குடிவாழ்வல்லான்குடி
சுரண்டையூர்முதலுட்கிடைசுற்றியே
கொய்யமலர்த்தாரிலஞ்சிக்குமர
குருவிளையாடுந்திருவிளையாட்டத்தில்.

சிங்கன் சொல்.

கொச்சகக்கலிப்பா.

கொட்டழகுகூத்துடையார் குற்றாலநாதவெற்பில்
நெட்டழகுவாள்விழியும் நெற்றியின்மேற்கஸ்தூரிப்
பொட்டழகுங்கரத்தழகும் பொன்னழகுமாய்நடந்த
கட்டழகிதன்னழகென் கண்ணளவுங்கொள்ளாதே.

தரு-இ-ம்-கல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

மேயினுமையே-பறவைகள்-மேயினுமையே

அநுபல்லவி.

மேயினுமையே குற்றாலநாதர்வியன்குல சேகரப்படிக்குளங்களும், ஆயிரப்பேரியுந்தென்காசியுஞ்சுற்றியபிரையுந் தேளிமாராலுங் கொத்தியே. மேயி

சரணங்கள்.

ஆலஞ்சூழ்த்திருப்பணியுங்கட்டி யன்னசத்திரங் கட்டியப்பாலுந் தென்காசிப், பாலமுதங்கட்டியப்படித்தாஞ்சேர்கட்டி பத்தசனங்களைக் காக்கத்துசங்கட்டி, மாலயன்போற்றிய குற்றாலநாதர்க்கு வழித்தொண்டு செய்திடக்கச்சைகட்டிக்கொள்ள, சீலன்கிளுவையில் சின்னஞ்சேத்திரன் சிறுகாலசந்திதிருத்துப்புறதெல்லாம். மேயி

தானைத்தலைவன்வயித்தியப்பலன்பெற்ற சைவக்கொழுந்துதருமத்துகாலயஞ், சேனைச்சவரிப்பெருமாள் சகோதரன் செல்வன்மருதூர்வயித்தியப்பனுடன்மாணவன் குற்றாலநாதனைப்பெற்றவன்வள்ளலெனும்பிச்சைப்பிள்ளைத் திருத்தெல்லாங், கானக்குளத்துள்வாய்கீழைப்புதுக்குளங்கற்பூரக்காற்பற்றுந்தட்டான் குளஞ்சுற்றும். மே

மன்னன்கிளுவையிற் சின்னணஞ்சேந்திரன் வடகரைவீட்டுக்கு மந்திரியாகவும், செந்நெல்மருதூற்குநாயகமாகவுந்தென்காசியூருக்குத் தாயகமாகவும், தன்னைவளர்க்கின்ற குற்றாலத்தந்தாதி சொன்னவன் நண்ணார்தொழும்பிச்சைப்பிள்ளைத்திருத்தெல்லாம். மேயி

நன்னகரூர்கட்டிச்சாலைமடங்கட்டி நாயகர்கோவிற் கொலுமண்டபங்கட்டி, தென்னமரம்பரமானந்தத்தோப்பிட்டுத் தெப்பகுளங்கட்டித் தேர்மண்டபங்கட்டிப், பன்னுந்திரிகூடத்தம்பங்கட்டிப் பசும்

பிறைகோடித்திருப்பணியுங்கட்டி யந்நாளில்தர்மக்களஞ்சியுங்கட்டி மணந்தபத்மநாபன் கட்டளைப்பற்றெல்லாம். மேயி

தந்தைமுன்கட்டினவம்பலத்துக்குந் தன்மத்துக்கும் நிலைக்கண்ணுடிபோலவே, எந்தையார்வாசலிற் பிள்ளையார்செய்வித்திரண்டு குறிஞ்சிப் படித்துறையுஞ்செய்தகொந்தார் புயத்தானிராக்கதப்பெருமாள் குற்றாலநாதன்முன்னுற்ற கோசன்வந்தனைசேர்சங்கு முத்துதன்மைத்துனன் மன்னன்வயித்தியநாதன் திருத்தெல்லாம். மேயி

ஆர்மேல்வருகின்றதுன்பமுநீக்கி யடங்கார் குறும்புறடக்கியேதென்காசியூர்மேனுயர்ந்தமனுநீதிகாட்டி யுடையவர்குற்றாலர் பூசைநைவேத்தியம்தேர்மேற்றுநாளுந்தெப் பற்றிநாளுஞ் சித்திரமண்டபஞ்சத்திரச்சாலையும் பார்மேல்வளசெய்யனந்தபத்மநாபன் பாலன் வயித்தியநாதன் திருத்தெல்லாம். மேயி

ஆறையழகன்கப்பபூபாலன் கட்டளையன்பன் திருமலைக்கொழுந்து தன்கட்டளை, காரம்புகுற்றாலச்சங்குகன சட்டளை நங்களெல்லாரரிநரிபாலன்கட்டளை வீறுசேர்பால்வண்ணச் சங்குவங்கட்டளை மிக்காணவோவனுக்கிருஷ்ணன்வணிகேசன் பேருடையன்பன் வருசங்குமுத்துதன்பேரானகட்டளைச் சீரானபற்றெல்லாம். மேயி

தானிகன் சர்க்கரைப்பண்டாரமென்னுந் தணியாதகாதற்பணிவிடைசெய்கின்ற மேன்மைபெருஞ்சுந்தரத்தோழன் கட்டளைமிக்க கருவைப்பதியாம்நாயகன் நானிலமும்புகழ்தாகந்தீர்த்தானுடன் வல்லூர்வருஞ்சங்காரமூர்த்திகட்டளை ஆனசடைத்தம்பிரான் பிச்சைகட்டளையப்பால்மலைநாட்டார் கட்டளைப்பெற்றெல்லாம். மேயி

சிங்கன் சொல்-கொச்சகக்கலிப்பா.

செட்டிக்கிரங்கிவினைதீர்த்தவர் குற்றாலர்வெற்பிற்
சுட்டிக்கிணங்குநுதற் சுந்தரியாள்கொங்கையின்
முட்டிக்கிடந்துகொஞ்சி முடித்தாடிகூடிநன்றாய்க்
கட்டிக்கிடக்குமுலைக் கச்சாய்க்கிடந்திலனே.

தரு-இ-ம்-கல்யாணி-தாளம்-சாப்பு.

பல்லவி.

கண்ணிகொண்டுவாடா-குறவாகண்ணிகொண்டுவாடா

அநுபல்லவி.

கண்ணிகொண்டுவாடாபண்ணவர்குற்றாலர்
காரார்திரிகூடச்சாரலிலேவந்து
பண்ணியபுண்ணியமேறினாற்போலே
பறவைகளெல்லாம்பறந்தேதிரியுது கண்ணி

சரணங்கள்.

மானவர்சூழுமதுரையிற்பாண்டியன்
மந்திரியர்கையின்முந்திப்பணம்போட்டுத்

தானைசைபட்டுமுன்கொண்டுகொக்கொல்லாந்
தரிகொண்டதில்லைநரிகொண்டுபோச்சுது
கானவர்வேடத்தையினமென்றெண்ணுதே
காக்கைப்படுத்தகருமுகில்வண்ணனும்
மேனுட்படுத்திட்டகொக்கிதின்னும்
விடைமேலிருப்பார்சண்டைமேலிருக்கிறது கண்ணி

முன்னுள்படுத்தபழம்பெருச்சாளியை
மூத்தநயினுர்மொடுவாய்க்கொடுபோனுர்
பின்னுனதம்பியாராறுமுமயிலையும்
பிள்ளைக்குறும்பாற்பிடித்துக்கொண்டேகினுர்
பன்னுருமன்னத்தை நன்னகரீசர்
பரிகலமீந்திடும்பார்ப்பானுக்கீந்தனர்
வன்னப்பருந்தொவிகள்வன்கொடுபோனுர்
வக்காவுநாரையுங்கொக்கும்படுக்கவே கண்ணி

மீறுமிலஞ்சிக்குறத்தியைக்கொண்டசெவ்
வேட்குறவன்முதல்வேட்டைக்குப்போனநாள்
ஆறுநாட்கூடியொருகொக்குபட்ட
தகப்பட்டகொக்கையவித்தொருசட்டியில்
சாறுகைபித்தபின்வேதபிராமணர்
தாமுட்கொண்டார்சைவர்தாமுங்கொண்டவர்தவப்
பேருமுனிவருமேற்றுகொண்டாரினிப்
பிக்குச்சொல்லாமலேகொக்குப்படுக்கவே கண்ணி

கவிக்கூற்று-கொச்சகக்கலிப்பா.

ஆனைகுத்திச்சாய்த்ததிறலாளர்திருக்குற்ருலர்
கூனிகொத்திமுக்கிவிக்கிக்கொக்கிருக்கும்பண்ணையெல்லாம்
சேனைபெற்றவாட்காரச்சிங்கனுக்குக்கண்ணிகொண்டு
பூனைக்குத்திநூவன்முழுப் பூனையைப்போல்வந்தானே.

நூதுவன் சொல்லுதல்.

இ-ம்-காம்போதி-சாப்புதாளம்.

கலந்தகண்ணியைநெருக்கிக்குத்திஞல்காக்காயும்படுமே குறவா
காக்காயும்படுமே

மலர்ந்தகண்ணியைக்கவிழ்த்துகுத்திஞல்வக்காவும்படுமே குறவா
வக்காவும்படுமே

உலர்ந்தகண்ணியையிறுக்கிக்குத்திஞலுள்ளானும்படுமே குறவா
உள்ளானும்படுமே

குலந்தகண்ணியைத்திருத்திக்குத்தடாகுற்ருலமலைமேல் குறவா
குற்ருலமலைமேல்

சிங்கன் சொல்-கொச்சகக்கலிப்பா.

கள்ளுலவுகொன்றையந்தார் கர்த்தர்திரிகூடவெற்பில்
பிள்ளைமதிவாணுதலால் பேசாகவீறங்கித்
துள்ளிமடிமேலிருந்து தோளின்மேலேறியவள்
கிள்ளைமொழிகேட்கவொரு கிள்ளையானேனில்லையே.

தரு-இ-ம்-கல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

கொம்பாரடையே பொறுபொறு-கொம்பாரடையே

அநுபல்லவி.

கொம்பாரடையே நம்பர்குற்றாலர்
கிருபைப்புறவில் பறவைபடுக்கவே
வம்பாகவந்தவுன் சந்தத்தைக்கேட்டல்லோ
வந்தகுருவிகலைந் தோடிப்போகுது கொம்பா

சரணங்கள்.

ஏருகமீன்களு மேறிவருகுது
எத்திசைப்பட்ட குருகும்வருகுது
நூறுருகண்ணியைப் பெருக்கக்குத்தியே
நூவனுந்தானு மிருந்தோமுணங்கினி
பேறுனகுளை மருந்தாகிலும்பிறர்
பேசாமல்வாடைப் பொடியாகிலும்வரக்
கூறுகிலுமொரு பங்காகிலுமொரு
கொக்காகிலும்நரிக் கொம்பாகிலுந்தாரேன் கொம்பா

பூசியுடுத்து முடித்துவளையிட்டுப்
பொட்டிட்டுமையிட்டு பொன்னிட்டுபூவிட்டுக்
காசுபறித்திடும் வேசையராசாரக்
கண்ணிக்குள்ளேபடுங் காமுகர்போலவும்
ஆசாரவீனத் துலுக்கன்குதிரை
யடியொட்டுப்பாறை யடியொட்டினார்போலுங்
தேசத்துக்கொக்கெல்லாங் கண்ணிக்குள்ளேவந்து
சிக்குதுபார்கறி தக்குதுபாரினிக் கொம்பா

ஆலாவுங்கொக்கு மருகேவருகுது
ஆசாரக்கள்ளர்போல் நாளாதிரிகுது
வேலானகன்னிய ராசையினுக்கீழு
மேலுந்திரிந்துத் திரிந்தெங்கள்
காலால்திரிந்துத் திரிந்தெங்கள்
கண்ணிக்குள்ளாகும் பறவையைப்போகட்டும்
பாலாறுநெய்யாறு பாய்கின்றவோட்டத்திற்
பல்லொடிக்கச்சிறு கல்லகப்பட்டார்போல் கொம்பா

கவிக்கூற்று.

ஆசிரிய விருத்தம்.

தேவிகுழல்வாய்மொழிப்பேர் காச்சியர்காச்சியர்கால் செண்பகக்கால் திருந்தமதிசூடினூர்கால், காவியல்பிவணமடைத் தட்டான் பற்றுக் களிக்குளமழகா பள்ளன்கூற்று, வாவிதொருநின்று சிங்கம் வேட்டை யாடிவருவியாற்றுக்கால் வடக்கால்தென்கால், கோவில் விளையாட்டமென்குங்கண்ணிகுத்திக்கூவினூ நூவனைவிட்டேவினனே.

சிங்கன் சொல்லுதல்.

இ-ம்-தர்பார்-சாப்புதாளம்.

கண்ணிகள்.

கல்வித்தமிழ்க்குறிபார்திரிகூடநாதர்கர்த்தர்பெற்றுள்ராவுஞ்
செல்வக்கடலணயான்குற்றாலச்சிவராமநம்பியெங்கோன்
வல்லமணியபட்டன்பெருமைவளர்ச்சங்குமுத்துநம்பி
வெல்லுங்குற்றாலநம்பிபுரவெல்லாம்மீன்கொத்திக்கூடாமையே
சீராளன்பிச்சைபிள்ளைதிருப்பணிசெல்வம்புதுக்குளமும்
காராளன்சங்குமுத்துதிருத்தொடைக்காகயென்கட்டளையும்
மாராஜன்தென்குடிசைவைத்தநாவன்புதுக்குளமும்
தாராளமானபுள்ளும்வெள்ளன்னமுந்தாராவுமேயுதையே
மாணக்கணக்குடனேஸ்ரீபண்டாரந்தன்மபத்தாகணக்குமத
வானவர்குற்றாலர்திருவாசம்மாடநற்பத்தியமும்
நாணிகழ்சூழ்குடிசைவைத்தியநாதன்
தானபமானம்வந்தாசிவமாரன்சம்பிரதிகணக்கும்
வேதநாராயணவேலகுமாரன்விமைத்தொண்டநபுடாளன்
சீதரன்முத்துமன்னன்விசாரிப்புச்சேர்ந்தபுரவியெல்லாம்
காதலாய்க்கண்ணிவைத்துபறவைக்குக்கங்கணங்கட்டிநின்றே
னேதோவொருபறவைதொடர்ந்துவந்தென்னைக்கடிக்குதையோ.

சிங்கன் சிங்கியை நினைத்துக்கொள்ளுதல்-விருத்தம்.

காவலர்திரிகூடத்திற் காதலாற்கலங்கிவந்த
நூவனைப்பழித்துச்சிங்க னேக்கியவேட்டைகாட்டில்
ஆவல்சேர்காமவேட்டை யாசையாலன்னப்போட்டைச்
சேவல்போய்புணரக்கண்டான் சிங்கமேற்பிறமைகொண்டான்.

சிங்கியை நினைத்துப் புலம்பல்.

இ-ம்-ஆசிரி-சாப்புதாளம்.

எட்டுக்குரவிட்டுகுரவிலொருகுரல்கூவும் புறவேயென
தேகாந்தச்சிங்கியைகூவாவதென்ன குலரேவ
மட்டார்குழலிதன்சாயலைக்காட்டு மயூரமேயவள்
மார்பிலேழுந்தமுலையையுங்காட்டுப சாரமே

தட்டொத்தகும்பத்தடமுலைகாட்டுஞ் சகோரமே சற்றுந்
தண்ணென்றும்வெச்சென்றுங்காட்டிவிட்டாலுபசாரமே
கட்டிதிரவியங்கண்போலுநன்னகர்க் காகாரமே
கண்டிடமெல்லாமவளாகத்தோற்றுது காவியேகண்ணில்

சிங்கன்சொல்-கொச்சகக்கலிப்பா.

செட்டிபத்திற்கண்ணிவைத்தேன்சிங்கிநடைச்சாயலினுற்
பெட்டைகுளத்திலன்னப்பேட்டைநடைபார்த்திருந்தேன்
கட்டுற்றநன்னகர்க்கென் கண்ணியெல்லாங்கொற்றிவெற்றிக்
கொட்டிகொண்டையேகுருவியெல்லாம்போயினுமே.

தரு-இ-ம்-முகாரி-சாப்புதாளம்.

பல்லவி.

போயினுமையே பறவைகள் போயினுமையே

அநுபல்லவி.

போயினுமையே நாயகர்குற்ருலர்
பொல்லாததக்கன்மதத்தையழித்தநாள்
வாயிலடிப்பட்டிடிபட்டுதைபட்டு
வானவர்தானவர்போனதுபோலவே போயி

சரணங்கள்.

மேடையினின்ருெருபஞ்சவர்னக்கிளி
மின்ஞேர்கைதப்பியென்முன்ஞகவந்தது
பேடையென்றேயதைச்சேவல்தொடர்ந்தது
பின்ஞெருசேவலுங்கூடத்தொடர்ந்தது
சூடியவின்பமிரண்டுக்குமெட்டாச்
சுந்தோபசுந்தார்வந்தகலாபத்திற்
காடெல்லாம்பட்டாய்க்கூடியுளம்பாடிக்
கண்ணியுந்தட்டியென்கண்ணிலும்அடியே போயி
ஆயிரங்கொக்குக்கண்ணியைவைத்தநா
னப்பாலேபோயொருமிப்பாயிருக்கையில்
ஆயிரங்காகங்களாயிரம்பட்டு
மறைத்துவிரைத்துக்கிறப்பதுபோலவே
காயமொடுங்கிக்கிடந்ததுகண்டுநான்
கண்ணிகழற்றிநிலத்திலேவைத்தபின்
சேயிழைதன்பொருட்டாரேபஞ்சாட்சரம்
சேவித்தமன்னவன்பாவம்போனுற்போலே போயி
தம்பமென்றேநம்பினேரைச்சதிபண்ணித்
தான்வாழ்ப்பார்ப்பவர்செல்வங்கள்போலவும்
பம்பம்வடபரலருவியிற்ருேய்ந்தவர்
பாவங்கள்நீருய்ப்போவதுபோலவும்

கும்பமுனிக்குச்சிவமானகாலங்
குதித்தோடிப்போனவைணவர்போலவும்
அம்பிகைபாதந்திரிகூடநாத
ரடியவர்தோள்வந்ததுன்பம்போனாற்போலே போயி

நூவன்-சிங்கனைப்பழித்தல்.

விருத்தம்.

வருக்கையார்திரிகூடத்தின் மாமிமேற்சையும்
பருத்திமேற்கண்ணுமானவைபோல்வேட்டைபோனாய்
கருத்துவேறானாய்தாயைகற்பித்தமகள்போலென்னைச்
சிரித்தனைசிங்காவுன்னைச்சிரித்ததுகாமம்போமே.

இதுவும்-நூவன்சொல்-விருத்தம்.

கடுக்கையார்திரிகூடத்திற் காமத்தால்வாமக்களைக்
குடித்தவர்போலேவீழ்ந்தாய் கொக்குநீபடுத்துவாழ்ந்தாயே
அடிக்கொருகினைவேன்சிங்கா வாசைப்பேயுனைவிடாது
செடிக்கொருவலையும்போட்டுச் சிங்கியைத்தேடுவோமே.

சிங்கன்-நூவனுக்குச் சொல்லுதல்.

விருத்தம்.

வேடுவர்கள்ளியோர்நாண் மெய்யில்மாதவனேயென்னை
யூடவிற்சொன்னபேச்சா லுறவியிலிபதைத்தானென்பார்
போடுவான்புட்பபாணம் புறப்படமாட்டேநூவா
சேடநீதிரிகூடத்திற் சிங்கியைத்தேடுவாயே.

நூவன்சொல்-விருத்தம்.

அங்கணர்திரிகூடத்தி லவனைநீயணிந்தாலென்ன
நுங்களிற்பிறந்தாலென்ன நுறுவிலிபகைத்தானென்பார்
கங்கணமெனக்கேன்சிங்கா காசிலையுனக்குண்டானாற்
கொங்கணச்சிங்கிதன்னை கூட்டிவாகாட்டுவேனே.

தலங்கள் தேடிப்போன

விருத்தம்.

திருவண்ணா மலைக்காஞ்சி திருக்காளத்தி சீர்காழிசிதம்பரந்
தென்னூர்காசி, குருநாடுகேதாரங் கோலகொண்டை கோகரணஞ்
செகநாதங் கும்பகோணம், அரியலூர்சீரகத் திருவானைக்காவடங்க
லும்போய்ச்சிங்கிதனைத் தேடிசிங்கன், வருசிராப்பள்ளிவிட்டு மதுரை
தேடி மகிமைகொண்டான் றிரிகூட மெதிர்கொண்டானே.

வில்லிபுத்தூர் கருவைநல்லூர்புன்னைக் காவுதேள் திருச்செந்தூர்
குருகூர், ஸ்ரீவைகுந்தநல்வேலி சிங்கிகுளந்தேவநல்லூர் நிலைதருசிற்றூர்
குமரிதிருவாங்கோடு, சொல்லரிய குருங்கைகளாக்காடுதேடித் தொன்

மருத்தூர்த் தாழநல்லூர்தேடிச், செல்வருறைசிவசைலம் பாவநாசந் திரிகூடற் சிங்கிதனைத் தேடுவானே.

சிங்கன்-சொல்லுதல்.

இராகம்-நீலாம்புரி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

பேடைக்குயிலுக்குக் கண்ணியைவைத்து நான் மாடப்புறாவுக்குப்போனேன், மாடப்புறாவுங் குயிலும்படுத்தேன் வேடிக்கைச் சிங்கியைக்காணேன்.

கோலமயிலுக்குக் கண்ணியைவைத்து நானாலாப்படுக்கவே போனேன், ஆலாவுங்கோலமயிலும் படுத்தேன்மாலான சிங்கியைக் காணேன்.

வவ்வால்பறவையின் வேட்டைக்குப்போய்க் காமவெவ்வேட்டைத் தப்பிவிட்டேன், வவ்வால்படுக்க மறநாயகப்படைவைபோக மாச்சுதுதானே.

இவ்வாறுவந்தவென் நெஞ்சில்விகாரத்தை யெவ்வாறுதீர்த்துக் கொள்வேனே, செவ்வாய்க்கரும்பை யநுகர்வஞ்சியை சிங்கியைக் காண்கிலேனே.

குற்றாலத்தில்-சிங்கன்-சிங்கியைத் தேடுதல்.

விருத்தம்.

நற்றாலந்தன்னி லுள்ளோர்யாவரேனு நன்னகரத்தலத்தில்வந்து பெறுவார்பேறு, பெற்றார்தானன்னகர தலத்தைவிட்டாற் பிரமலோகம்வரைக்கும் பேறுண்டாமோ, வற்றாலவடிவருவிச்சாரநீங்கி வடகாசிகுமரிமட்டு மலைந்தசிங்கன், குற்றாலத்தலத்தின்முன்னே தவத்தால்வந்து கூடினான்சிங்கிதனைத் தேடினானே.

சிங்கியைக் காணமற் புலம்பல்.

தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

சிங்கியைக்காணேன் என்வங்கணச் சிங்கியைக்காணேன்

அநுபல்லவி.

சிங்கியைக்காமப்பசுங்கிளிப்பேடையைச்
சீர்வளர்குற்றாலர்பேர்வளம்பாடிய
சங்கீதவாரியையிங்கிதநாரியைச்
சல்லாபக்காரியையுல்லாசமோகன சிங்கியை

சரணங்கள்.

ஆரத்தனத்தைத் படங்கொண்டுமூடி யசைந்துநின்றாளதையானைக்கொம்பென்றே, கோரத்தை வைத்த விழிக்கெதிர் சென்றேன்

கொஞ்சத் தனத்தை யறிந்துசுகக்காறி பாரத்தனத்தைத் திறந்து விட்டாள்கண்டு பாவியேனுவி மறந்துவிட்டேனுடன் தீரக்கனியை மயக்கிமுயக்கியே சிங்காரமோகனச் சிங்கிகொண்டாளந்த. சிங்கி

பூவென்றபாதம் வருடிவருடிப் புளகமூலையை நெருடிநெருடியே வென்ற கண்ணுக்கோரஞ்சனந்தீட்டி யெடுத்துச்சுருளையிதழாலிடுக் குவள் வாவென்றுகைச்சுருள் தானென்றுநானுவக்கக்குறிகண்டு நகக்குறி வைத்தபின்னு வென்றொருக்காலுமுரைப்பனதுக்கிடந்து கொதிக்குதென்பேய்மனம். சிங்கி

தாராடுக்குன்றி வடத்தையொதுக்கித் தடமார்பிறுகத்தழுவ வந் தாலவள்-வாராடுங்கொங்கைக்குச் சந்தனம்பூச மறுத்துநான்பூசி னும் பூசலாகாதென்பாள், சீராடிக்கூடிவிளையாடியிப்படி தீராமையல் தந்த தீராண்மைக்காரியைக், காராடுகண்டர்தென்னாட்டுறை காரி கைப்பூவையைப் பாரியப்பாவையைச். சிங்கி

நூவன்-வினவுதல்.

கொச்சகக் கலிப்பா.

சங்கமெல்லாமுத்தீனுஞ் சங்கர்திரிகூடவெற்பிற்
பொங்கமெல்லாஞ்செய்யுமுங்கள் பொங்கமெல்லாம்யாரறிவார்
சிங்கமெல்லாமொத்தநுடிச் சிங்காவுன்சிங்கிதனக்
கங்கமெல்லாஞ்சொல்லி யடையாளஞ்சொல்வாயே.

தரு-இ-ம்-பியாகடை-மிசுரதாளம்.

பல்லவி.

கறுப்பிலழகியடா-காமச்

அநுபல்லவி.

சுறுக்கிலழகிசிங்கி சுகக்காரி கறுப்பி

சரணங்கள்.

கண்களிரண்டுமம்புக் கணைபோல்நீண்டிருக்கும்
கையத்தனையகலங்காணுமடா
பெண்கள்மயக்குமவள் விரகம்பார்வை
சிங்கிபிடித்தாலந்தப் பயனும்பெலப்பானே. கறுப்பி

நகையுமுகமுமவள் நாணையக்கைவீச்சும்
பகைவரும்பிரிந்துபார்ப்பாரடா
தொகையாச்சொன்னேனினிச் சொல்லக்கூடாதொரு
வகையாய்வருகுதென்னைமயக்குதையேஐயே. கறுப்பி

விடையில்வரும்பவனி யுடையர்திருக்குற்றாலர்
சடையிலிவள்பிறைபோல் தனிநுதலாள்
சடையிலழகுமிகு குடையிலழகுமவ
ளுடையிலழகுமென்னை யுருக்குதையேஐயே. கறுப்பி

கொச்சகக் கலிப்பா.

சாட்டிநிற்குமண்டமெல்லாஞ் சாட்டையில்லாப்பம்பரம்போ
லாட்டிவிக்குங்குற்றாலத் தண்ணலார்நன்னாட்டில்
காட்டுவிக்குமுன்மோகக் கண்மாயச்சிங்கிதனைக்
கூட்டிவைக்கும்பேர்களுக்குக் கூலியென்னசொல்வாயே.

இராகம்-தர்பார்-ரூபகதாளம்.
கண்ணிகள்.

வாடைமருந்துப்பொடியும் அம்மியூர்
மரப்பாவைபின்தொடரமாயப்பொடியும்
கூடியிருக்கமருந்தும் இருபொழுதும்
கூடியிருப்பார்களைக்கலைக்கமருந்தும்
காடுகட்டக்கினிக்கட்டு குறளிவித்தை
கண்கட்டுவித்தைகளுங்காட்டித்தருவேன்
வேடிக்கைக்காமரதிபோல் திரிகூட
வெற்பிலுறைசிங்கிதனைக்காட்டாயையே
மலையைக்கரையைப்பண்ணுவேன் குமரிகட்கு
வாராதமுலைகளும் வரப்பண்ணுவேன்
முலையையொளிக்கப்பண்ணுவேன் ஒளித்தபேரை
மோகினிமந்திரஞ்சொல்லிவரப்பண்ணுவேன்
திலதசீரகஞ்செய்வேன் ஒருவருக்குந்
தெரியாமற்போகவரச்சித்துமறிவேன்
கலகமதனப்பயலை யெண்மீதிற்கண்
காட்டிவிட்டசிங்கிதனைக் காட்டாயையே.

நூவன்-சொல்லுதல்.
கொச்சகக் கலிப்பா.

ஆற்றைநான்கடத்திவிட்டா லாகாசமார்க்கமோடத்
தேற்றநீயறியாயல்லோ திரிகூடமலையிற்சிங்கா
சாற்றுமுன்மருந்துபோலச் சகலர்க்குங்குறிகள்சொல்லிய
போற்றுமுன்சிங்கிபோன புதுத்தெருவிதுகண்டாயே.

சிங்கன்-சிங்கியைக்காணமல்-வருந்துதல்.
பல்லவி

எங்கேதான்போனளேயே-என்சிங்கியிப்போ
எங்கேதான்போனளேயே

அநுபல்லவி.

கங்காளர்திரிகூடகர்த்தர்திருநாடுதனில் எங்கே

சரணங்கள்.

வேரளகிலுமயக்குவள்-வலியதட்டில்
கேளாமலுமுயக்குவள்
ஆளாயழகனுமாயாரையெங்கேகண்டாளோ
தேளாசைக்காரிசிங்கிசும்மாகிடக்கமாட்டாள் எங்கே

மெய்க்குறியாலெங்கும்வெல்லுவள் மனக்குறியுங்
கைக்குறியுங்கண்டுசொல்லுவள்
திக்கிலடங்காதுகுறியிக்குளடங்காதுமொழி
மைக்குளடங்காதுவிழிகைக்குளடங்காதகள்ளி எங்கே

சித்திரச்சபேசர்மேலே-சிவசமயப்
பத்தியில்லாப்பேயர்போலே
குத்தியிலாக்குங்கள்ளுங்குடுவையிற்றென்னங்கள்ளும்
அத்தனையுங்குடித்துப்போட்டார்பிறகேதொடர்ந்தாளோ

சிங்கியெதிர்ப்படுதல்.

விருத்தம்.

சீதம்புனைந்தகுற்றாலநாதர் திருநாட்டிலிருவருந் தான்கண்ட காதலெனுங் கடல்பெருகித் தரிகொள்ளாமற்கைகலக்கும்போது தேவலைகுறுக்கிட்டாற்போல், வீதிவந்துகுறுக்கிடவேநாணம்பூண்ட விண்ணுணச்சிங்கிதனைக் கண்டுசிங்கன், தூதுவந்தநளனுனன் கன்னிமாடந்துலங்குதமயந்தியெனத் தோன்றினளே.

தரு-இ-ம்-எதுகுலகாம்போதி-சாப்புதாளம்.

பல்லவி.

இங்கேவாராய்-என்கண்ணே-இங்கேவாராய்

அநுபல்லவி.

இங்கேவாராய்மலர்ச்செங்கைதாராய்மோகச்-சங்கைபாராய்
காமச்-சிங்கியாரேயிப்போ இங்கே

சரணங்கள்.

பாதம்நோமே நொந்தால்மனம்-பேதமாமே

பாதம்நோகநிற்பதேது பாவமினிகூதலோ கொடிது காதலோகடினம்
பாவிதானே-மதன்கணை ஏவினனே

காவில்மாங்குயில்கள் கூவிக்கூவியென தாவிசோருதன்னையாவியாவி
கட்ட இங்கே

பெருக்கம்பாடிகொள்ள மருக்கள் சூடிக்கொள்ள ஒருக்காலூடிக்
கொள்ள இருகால்கூடிக்கொள்ள இங்கே

சிங்கன் சிங்கியைக்கண்டு மகிழ்தல்.

கொச்சகக் கலிப்பா.

தெண்டாடுஞ்சுந்தரர்க்குத் தோழர்திரிகூடவெற்பிற்
றிண்டாடும்நின் றசிங்கன் சீராடுஞ்சிங்கிதனைக்
கண்டாடித்துள்ளாடிக் கள்ளாடுந்தும்பியைக்
கொண்டாடிக்கொண்டாடிக் கூத்தாடிக்கொண்டானே.

சிங்கனுக்கும் சிங்கிக்கும் சம்வாதம்.

இராகம்-தன்யாசி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

சிங்கன்-இத்தனைநாளாக வென்னுடன்சொல்லாமல்
எங்கேநடந்தாய்சிங்கி — எங்கே

சிங்கி-கொத்தார்குழலார்க்கு விஸ்தாரமாகவே
குறிசொல்லப்போனேனடாசிங்கா — குறிசொல்

சிங்கன்-பார்க்கிலதிசயந் தோணுதுசொல்லப்
பயமாயிருக்குதடிசிங்கி — பயமா

சிங்கி-ஆர்க்குப்பயமினி தோணினகாரியம்
அஞ்சாமற்சொல்லடாசிங்கா — அஞ்சாமற்

சிங்கன்-காலுக்குமேலே பெரியவிரியன்
கடித்துகிடப்பானேன்சிங்கி — கடித்து

சிங்கி-சேலத்துநாட்டிற் குறிசொல்லிப்பெற்ற
சிலம்புகிடக்குதடாசிங்கா — சிலம்பு

சிங்கன்-சேலத்தாரிட்ட சிலம்பிற்குமேலே
திருகுமுருக்கென்னடிசிங்கி — திருகுமு

சிங்கி-கோலத்துநாட்டார் முறுக்கிட்டதண்டை
கொடுத்தவரிசையடாசிங்கா — கொடுத்த

சிங்கன்-நீண்டுங்குறுகியும் நாங்கூழுப்போல
நெளிந்தநெளிவென்னடிசிங்கி — நெளிந்

சிங்கி-பாண்டியனார்மகள் வேண்டுங்குறிக்காக
பாடகமிட்டதடாசிங்கா — பாடக

சிங்கன்-மாண்டத்தவளையுன் காலிலேகட்டிய
மார்க்கமதேதடிசிங்கி — மார்க்கம்

சிங்கி-ஆண்டவர்குற்றாலர் சந்நிதிப்பெண்க
ளணிமணிக்கேச்சடாசிங்கா — அணிமணி

சிங்கன்-சுண்டுவிரல்தோறுங் குடலைப்பூசி
சுருண்டுகிடப்பானேன்சிங்கி — சுருண்டு

சிங்கி-கண்டியதேசத்திற் பண்டுநான்பெற்றது
    காலாழிபீலியடாசிங்கா காலாழி
சிங்கன்-மெல்லியபூந்தொடை வாழைக்குறுத்தை
    விரித்துமடித்தவரார்சிங்கி விரித்து
சிங்கி-நெல்வேலியார்தந்த சல்லாபச்சேலை
    நெறிபிடித்தேகொடுத்தார்சிங்கா நெறி
சிங்கன்-ஊருக்குமேற்கே யுயர்ந்தவரசிலே
    சாரைப்பாம்பேதடிசிங்கி சாரைப்
சிங்கி-சீர்பெற்றசோழன் குமாரத்தியார்தந்த
    செம்பொன்னரைஞாணடாசிங்கா செம்பொ
சிங்கன்-மார்பிற்குமேலே புடைத்தசிலமதியில்
    கொப்புளங்கொள்வானேன்சிங்கி கொப்புளங்
சிங்கி-பாருக்குள்ளேற்றமாங் காயங்குளத்தார்தந்த
    பாரமுத்தாரமடாசிங்கா பாரமு
சிங்கன்-ஆகாவடமெல்லா மங்ஙனேகூடாவே
    ஆவாரைப்பூத்ததடிசிங்கி ஆவாரை
சிங்கி-ஏகாவடமென்று சீர்காழியாரெனக்
    கிட்டவரிசையடாசிங்கா கிட்டவரி
சிங்கன்-எட்டுப்பாவை குமுறுங்கழுத்திலே
    பத்தெட்டுப்பாம்பேதடிசிங்கி பத்தெ
சிங்கி-கூட்டத்துநாட்டாருங் காயகுளத்தாரும்
    இட்டசவளியடாசிங்கா இட்டசவ

மேற்படி வேறு.

இராகம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

சிங்கன்-வள்ளிக்கொடியிலே துத்திப்பூப்பூர்ப்பானேன் சிங்கி
சிங்கி-காதில்வங்காளத்தாரிட்ட சிங்காரக்கொப்படா சிங்கா
சிங்கன்-கள்ளியப்பூபூர்ப்ப ததிசயமல்லவே சிங்கி
சிங்கி-தெற்கு-வள்ளியூராறந்த மாணிக்கத்தண்டோடா சிங்கா
சிங்கன்-வண்ணக்குமிழிலே புன்னையரும்பேது சிங்கி
சிங்கி-மண்ணில்-துன்னீர்ச்சலாபத்து முத்துமூக்குத்திகாண் சிங்கா
சிங்கன்-சொருகிமுடித்ததில் தூக்கணமேதடி சிங்கி
சிங்கி-தென்-குருகையூரார்தந்த குப்பியுந்தொங்கலுஞ் சிங்கா
சிங்கன்-விந்தையாமேலெல்லா மின்வெட்டிப்பார்ப்பானேன் சிங்கி
சிங்கி-இந்தவண்ணப்பணிகளின் மாணிக்கக்கல்லொளி சிங்கா

சிங்கன்-முலையென்றுசொல்வதை மூடிக்கிடப்பானேன் சிங்கி
சிங்கி-செஞ்சிவிலைமாதர்தந்தது வேடிக்கைக்கச்சடா சிங்கா
சிங்கன்-மூடிக்கிடப்பவும் நாற்றங்குலைப்பானேன் சிங்கி
சிங்கி-இது ஆடித்திருத்தக்கால் வாடைப்பொடியடா சிங்கா
சிங்கன்-அந்தப்பொடியால் முலைவீக்கம்போமோ சிங்கி
சிங்கி-வீக்கம்ஆனாலுனக்கென்ன போனாலுனக்கென்ன சிங்கா
சிங்கன்-இந்தப்பணியைநீ பூணப்பொறுக்குமோ சிங்கி
சிங்கி-புவிஈசர்க்குங்கற்றோர்க்கும் எல்லாம்பொறுக்குங்கண் சிங்கா
சிங்கன்-குல்லத்தைப்பார்த்தால் கொடியிடைதாங்குமோ சிங்கி
சிங்கி-தன்-கொடிக்குச்சுரக்காய் நனைத்துகிடக்குமோ சிங்கா
சிங்கன்-இல்லாதசித்தெல்லாம் எங்கேபடித்தாயடி சிங்கி
சிங்கி-நாட்டில்நல்லாரைக்கண்டாருக் கெல்லாம்வருமடா சிங்கா
சிங்கன்-பெட்டகப்பாம்பை பிடித்தாட்டவேண்டாமோ சிங்கி
சிங்கி-இந்தவெட்டவெளியிலே கோடிப்பாம்பாடுமோ சிங்கா
சிங்கன்-கட்டிக்கொண்டேசற்றே முத்தங்கொடுக்கவோ சிங்கி
சிங்கி-நடுப்பட்டபகலில் நானெட்டிக்கொடுப்பேனோ சிங்கா
சிங்கன்-முட்டப்படமுலை யானையைமுட்டவோ சிங்கி
சிங்கி-காமம்-மட்டுப்படாவிட்டால் மண்ணோடேமுட்டடா சிங்கா
சிங்கன்-சேலையுடைதன்னைச் சற்றேநெகிழ்க்கவோ சிங்கி
சிங்கி-சும்மா-நாலுபேர்முன்னென்னை நாணங்கெடுக்காதே சிங்கா
சிங்கன்-பாதம்வருடித் துரைகுத்தம்வேண்டாமோ சிங்கி
சிங்கி-மனம்போதம்வருடிப்போய்ப் பூனையைக்குத்தடா சிங்கா
சிங்கன்-நாக்குத்துடிக்குது நல்வாயிழுக்குவது சிங்கி
சிங்கி-உன்றன்வாய்க்குள்ளிருப்பது மாலைகளெல்லவோ சிங்கா
சிங்கன்-ஒக்கப்பசிக்கவோ ஒதுக்கிடம்பார்க்கவோ சிங்கி
சிங்கி-பருங்கொக்குப்படுக்கக் குறியிடம்பாரடா சிங்கா
சிங்கன்-விந்தைக்காரியுன்னை வெல்லக்கூடாதடி சிங்கி
சிங்கி-அதுசந்தேகமோவுன் தலைப்பேனைக்கேளடா சிங்கா
சிங்கன்-தென்னாடெல்லாமுன்னைத் தேடித்திரிந்தேனே சிங்கி
சிங்கி-அப்பாலிந்நாட்டில்வந்தென்னை யெப்படிநீகண்டாய் சிங்கா
சிங்கன்-நன்னகர்குற்றால நாதரைவேண்டினேன் சிங்கி
சிங்கி-மணிப்-பன்னகம்பூண்டாரைப்பாடிக்கொண்டாடுவோம்சிங்கா
சிங்கன்-பாடிக்கொள்வாரெவ ராடிக்கொள்வாரெவர் சிங்கி
சிங்கி-நீதான்பாடிக்கொண்டாற்போது மாடிக்கொள்வேனடா சிங்கா

நேரிசை வெண்பா.

சுற்றுத வூர்தோறுஞ் சுத்தவெண் டாம்புவியீர்
குற்றால மென்றொருக்காற் கூறினால்-வற்று
வடவருவி யானே மறுபிறவிச் சேற்றி
னடவருவி யானே நமை.

வாழ்த்து கண்ணிகள்.

கொற்றமதிச் சடையானைக் குறும்பலா வுடையானை
வெற்றிமழுப் படையானை விடையை வாழ்த்துகிறேன்.
தாகையில்லாத் திருமகனைத் தடமலைக்கு மருமகனை
வேதசங்க விதியானை வேதியனை வாழ்த்துகிறேன்.
தந்திமுதற் கொருகோனைத் தமிழிலஞ்சி முருகோனை
மைந்தனெனு மிறையோனை மறையோனை வாழ்த்துகிறேன்.
தீமுகத்திற் பரிகொடுத்த திருமுடிக்கா யொருமுடியை
மாமனுக்கு வரிசையிட்ட மாமனையே வாழ்த்துகிறேன்.
காமனுக்கும் பூமனுக்குங் கன்னிதெய்வ யானைக்கும்
மாமனென வேபகரும் வள்ளல்தனை வாழ்த்துகிறேன்.
நீடுலகெ லாமளந்த நெடியமா லும்மயனும்
தேடரிய திரிகூடற் செல்வனையான் வாழ்த்துகிறேன்.
சித்ரநதி தடத்தானைத் தேனருவித் தடத்தானைச்
சித்ரசபை நடத்தானைத் திடத்தானை வாழ்த்துகிறேன்.
காலவ யிரவனைக் காவில் வளர்ந்தவனை
மேலவா சப்பலனை மென்மேலும் வாழ்த்துகிறேன்.
கருதுலக மெங்கும்புகழ் கன்னிமார் பெண்களையும்
வரிசைதுரைத் தனமாய் மாமனையும் வாழ்த்துகிறேன்.
பனகமணி பூண்டவனைப் பக்தர்களை யாண்டவனை
அனவரதத் தாண்டவனை யாண்டவனை வாழ்த்துகிறேன்.

இதுவுமது-விருத்தம்.

வார்வாழுந்தனத்திகுழல்வாள்மொழியம்பிகைவாழிவடவைபூற்குந்
தார்வாழிதிரிகூடத்தார்வாழி குருமுனிவன்றலைநாட்சொன்ன
போர்வாழியரசர்கள்செங்கோல்வாழி நன்னகப்பேராலோங்கும்
ஊர்வாழிகுற்றாலத்தவத்தடியார் வாழிநீடூழிதானே.

திருக்குற்றாலக் குறவஞ்சி
முற்றிற்று.

திருமகள்விலாச அச்சியந்திரசாலை, சென்னை:—1939.